





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

தமிழக மாவட்டங்களில் நடைபெற்ற

**'பாரத ரத்னா' புரட்சித்தலைவர்**

**டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில்**

**அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்**



அம்மா வழியில் நல்லாட்சி - அதற்கு
ஓராண்டு சாதனையே சாட்சி

Uô i éÁá RÁrSôå êRXûUfNo

Rì. GPITô¼ K. **TZÉNôÁ** AYoLs

RÁZL UôYhPeLÇp SûPùTt\

‘TôWR Wj ]ô’ éWhºjRûXYo

PôdPo **Gm.Ë. Bo** Öt\ôiå ÅZôÅp

AÈÅjR º\lé AÈÅléLs

சிறப்பு வெளியீடு எண். 15

# தமிழரசு

இலவச வெளியீடு

ஜனவரி 2018

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பெயர் சூட்டல்! | 1 |
| 2. | விவசாய பெருங்குடி மக்களின் வருமானம் உயர நீரா பானம் திட்டம்! | 2 |
| 3. | ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு 3ஆவது புதிய வருவாய் கோட்டம்! | 4 |
| 4. | ரூ.14 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூர் – கடலூர் மாவட்டத்தை இணைக்கும் ஒரு உயர்மட்டப் பாலம்! | 5 |
| 5. | ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் கடல் நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம்! | 6 |
| 6. | ரூ.400 கோடி மதிப்பீட்டில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்படும் தடுப்பணைக்கு நிருவாக ஒப்புதல்! | 8 |
| 7. | குடவாசலில் தொடங்கப்படும் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பெயர்! | 11 |
| 8. | ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்திற்கு கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை! | 13 |
| 9. | காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புதிய மீன்பிடித் துறைமுகம்! | 14 |
| 10. | ரூ.5.03 கோடி மதிப்பீட்டில் 22 சாலைகள் தார் சாலையாக தரம் உயர்வு! | 16 |
| 11. | பூனாட்சி கிராமத்தில் துணை மின் நிலையம்! | 18 |
| 12. | திருவண்ணாமலை – வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம்! | 21 |
| 13. | 3.57 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்! | 23 |
| 14. | ரூ.170 கோடி மதிப்பீட்டில் 14,470 மீனவர்கள் பயன்பெறும் வகையில் நவீன மீன்பிடித் துறைமுகம்! | 24 |
| 15. | ஓசூர் நகருக்கு வெளிவட்ட சாலை அமைக்க ரூ.145 கோடிக்கு நில எடுப்பு பணி! | 27 |

| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 16. | ரூ.120 கோடி செலவில் புதிய மின் மாற்றிகள்! | 31 |
| 17. | ரூ.7 கோடி மதிப்பீட்டில் இருவழிப் பாதையுடன் கூடிய ஒரு புதிய பாலம்! | 34 |
| 18. | தருமபுரி மாவட்டத்திற்கு பாலங்கள், மேம்பாலங்கள் மற்றும் கால்வாய்கள்! | 36 |
| 19. | பொன்னமராவதி – இலுப்பூர் நகராட்சிகளாகத் தரம் உயர்த்த பரிசீலனை! | 40 |
| 20. | தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களின் காப்பீட்டுத்தொகை ரூ.1 இலட்சமாக உயர்வு! | 42 |
| 21. | கொட்டாம்பட்டி கிராமத்தில் ஒருங்கிணைந்த புதிய பேருந்து நிலையம்! | 46 |
| 22. | போடிநாயக்கனூர், உத்தமபாளையம், ஆண்டிப்பட்டி மற்றும் பெரியகுளம் ஆகிய வட்டத்தில் 11 தடுப்பணைகள்! | 49 |
| 23. | “அனைவருக்கும் வீடு” வழங்கும் திட்டத்தின் கீழ் 240 அடுக்குமாடி குடியிருப்புகள்! | 52 |
| 24. | தைல மரம் நடவு செய்யும் விவசாயிகளுக்கான ஆதார விலை ரூ.4,000 ஆக உயர்வு! | 56 |
| 25. | திரு.சி.பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம்! | 60 |
| 26. | இராமநாதபுரம் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்வு! | 63 |
| 27. | “எம்.ஜி.ஆர். 100” என்ற புதிய இரக நெல் அறிமுகம்! | 66 |
| 28. | ரூ.162 கோடி மதிப்பீட்டில் 1,792 அடுக்குமாடிக் குடியிருப்புகள்! | 71 |
| 29. | ரூ.58.81 கோடி மதிப்பீட்டில் 1,480 பயனாளிகளுக்கு புதிய குடியிருப்புகள்! | 80 |
| 30. | ரூ.12.5 கோடி மதிப்பீட்டில் நிலக்கோட்டை வட்டத்தில் புதிய தடுப்பணை! | 83 |

## மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் பெயர் சூட்டல்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 30.06.2017 அன்று மதுரையில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு தொடக்க விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**உ**லகப்புகழ் பெற்ற மீனாட்சி அம்மன் எழுந்தருளி இருக்கும் இம் மதுரை மண் – மல்லிகைக்கும் பெயர் பெற்றது – வீரத்திற்கும், விவேகத்திற்கும் மற்றும் விசுவாசத்திற்கும் பெயர் பெற்றது என்றால் அது மிகையல்ல.

கழகம் ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். புரட்சித்தலைவி அம்மா மற்றும் அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசிற்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்திற்கு, விசுவாசமாக இருக்கும் மக்கள் மதுரை மாவட்ட மக்கள் என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு நூற்றாண்டு விழா நாயகர், மக்கள் தலைவர், முன்னாள் முதலமைச்சர், பாரத ரத்னா டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களது பெயரை சூட்ட வேண்டும் என்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ அவர்களும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.உதயகுமார் அவர்களும், மதுரை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் விடுத்த கோரிக்கையினை மாண்புமிகு அரசு உடனடியாக ஏற்று,

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் – மக்கள் தலைவராக – தமிழகத்தின் முதலமைச்சராக 40 வருடங்களுக்கு முன் அதாவது – 30.06.1977இல் பதவியேற்ற இதே நன்னாளில் **மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் என்று பெயர் சூட்டப்படுகிறது என்பதை இம்மேடையில் மகிழ்ச்சியுடன் அறிவிப்பதில் பெருமை கொள்கிறேன்.**

❖ ❖ ❖

## விவசாய பெருங்குடி மக்களின் வருமானம் உயர நீரா பானம் திட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 22.07.2017 அன்று திருப்பூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற போது இந்த திருப்பூர் மாவட்ட மக்கள் பயன்பெற வேண்டி, விவசாய பெருங்குடி மக்கள் வாழ்வில் வளம்பெற வேண்டும் என்பதற்காக அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே ஆரம்பித்தார்கள்.

ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் வந்த அம்மா அரசு, இதற்காக இந்த ஆண்டு 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றது. இந்த அத்திக்கடவு – அவிநாசி திட்டம் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு ஆகிய மூன்று மாவட்டங்கள் உள்ளடங்கிய விவசாய பெருங்குடி மக்கள் பயன்பெறுகின்ற ஒரு அற்புதமான திட்டம். இந்தத் திட்டத்திற்கு கிட்டத்தட்ட 1.50 டிஎம்சி தண்ணீர் தேவை. இந்த திட்டத்திற்காக 70 நாட்கள், 250 கிணறுகளில் தண்ணீர் எடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட 9 வட்டங்களில் உள்ள பொதுப்பணித் துறை ஏரிகள், 41 ஏரிகள், 630 குளம் குட்டைகள் இதனால் நீர் நிரப்பப்பட்டு நிலத்தடி நீர் செறிவூட்டப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கிட்டத்தட்ட இந்த திட்டம், 2 திட்டங்களாக வகுக்கப்பட்டன. ஆகவே இந்த திட்டங்களிலே மிக முக்கியமானவைகளை கவனித்து, எந்தத் திட்டம் எளிது என்றும், எந்தத் திட்டம் வேகமாக விரைவாக நடைபெறும் என்றும், இந்த திட்டத்தை ஆய்வு செய்த போது, இதிலே நமக்குக் கிடைத்தது, பவானி அருகில் உள்ள காளிங்கராயன் பகுதியிலிருந்து தண்ணீர், பம்ப் செய்யப்பட்டு இந்த திட்டம் நிறைவேற்றப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திட்டத்திற்காக 1,516 கோடி ரூபாய் அரசு ஒதுக்கி இருக்கிறது. இதை மாநில அரசாங்கமே முழுமையாக செயல்படுத்தலாம். இதற்கு முன்பு இருந்த திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் சுமார் 7 அல்லது 8 ஆண்டு காலம் பிடிக்கும். ஆனால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற போது, 30 மாதத்தில் இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்கு வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். வருகின்ற டிசம்பர் மாதத்திற்குள் இந்த பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டு, இந்தப் பணிகள்

தொடங்குகின்ற நற்செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்து, அம்மாவினுடைய அரசு ஆட்சியில் இருக்கின்ற போதே, ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற போதே அடிக்கல் நாட்டப்பட்டு அம்மாவுடைய ஆட்சியிலே திறப்பு விழா செய்யப்பட்டு 3 மாவட்ட விவசாய பெருங்குடி மக்கள் பயன்பெறுவார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த அருமை சகோதரர் திரு.வேலுமணி அவர்களும், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த அருமை நண்பர் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களும், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களும், இந்த திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், கழக முன்னோடி பொறுப்பாளர்களும், விவசாய பெருங்குடி மக்களும் அத்தனைபேரும் கோரிக்கை வைத்தார்கள். எங்கள் பகுதியில் தென்னையை நாங்கள் அதிகமாக பயிரிட்டிருக்கின்றோம். இந்தத் தென்னை மரத்திலிருந்து நீரா என்கிற பானத்தை இறக்குகின்ற ஒரு சூழ்நிலையை எங்களுக்கு உருவாக்கித் தாருங்கள். தென்னைக்கு என்று தனியாக அறிவியுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆகவே, இந்த நீராபானம் மூலமாக அருமையான திட்டத்தை அரசு அறிவித்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இந்த நீராபானத்தினை எடுப்பதன்மூலம் விவசாய பெருங்குடி மக்கள் பலமடங்கு வருவாய் பெறுவார்கள். இன்றைக்கு ஒரு தென்னை மரம் மூலம் ஆண்டுக்கு 1,000 ரூபாய் வருமானம் என்று எடுத்துக் கொண்டால், இந்த நீரா பானம் வருகின்ற போது, அதை நடைமுறைப்படுத்துகின்ற போது ஒரு தென்னை மரத்திற்கு குறைந்தபட்சம் ஆண்டுக்கு 5,000 ரூபாய் வருமானம் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல மேடையில் வீற்றிருக்கினற அமைச்சர் பெருமக்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அமராவதி ஆற்றிலே தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது, படிப்படியாக உயர்ந்து கொண்டிருக்கிறது, ஆகவே எங்களுக்கு தண்ணீர் கால்வாய்களிலும், ஆற்றிலும் திறந்துவிட வேண்டும், குடிதண்ணீர் வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்கள். அம்மாவினுடைய அரசு கனிவோடு பரிசீலித்து இதையும் செய்யும் என்பதை மகிழ்ச்சியோடு இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

திருவண்ணாமலை

## ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு 3ஆவது புதிய வருவாய் கோட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 29.07.2017 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

திருவண்ணாமலை மாவட்ட அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று இரண்டு புதிய அறிவிப்புகளை மகிழ்ச்சியுடன் அறிவிக்க விரும்புகின்றேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர், செங்கம், கலசபாக்கம் வட்டங்களில் உள்ள மலைகிராமங்களை உள்ளடக்கி ஜமுனாமரத்தூர் என்ற புதிய வட்டம் உருவாக்கப்படும். இதன் மூலம் மலைகிராமங்களிலுள்ள மக்கள் அவர்கள் பகுதியிலேயே புதியதாக திறக்கப்பட உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் தங்களது தேவைகளை சிரமமின்றி பூர்த்தி செய்து கொள்ளலாம்.

திருவண்ணாமலையில் இதுவரை இரண்டு வருவாய் கோட்டங்கள் மட்டுமே உள்ளன. எனவே, நிருவாக மேம்பாட்டுக்காகவும், பொதுமக்கள் வசதிக்காகவும் ஆரணி, போளூர், கலசபாக்கம் மற்றும் புதியதாக அமையவுள்ள ஜமுனாமரத்தூர் என்கிற 4 வட்டங்களை உள்ளடக்கி, ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு 3ஆவது புதிய வருவாய் கோட்டம் அமைக்கப்படும்.

❖ ❖ ❖

## ரூ.14 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூர் – கடலூர் மாவட்டத்தை இணைக்கும் ஒரு உயர்மட்டப் பாலம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 05.08.2017 அன்று பெரம்பலூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

பெரம்பலூர் மாவட்ட மக்கள் விடுமுறை நாட்களில் தங்கள் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியுடன் சுற்றுலா சென்று வர அருகில் உள்ள முக்கொம்பிற்கோ, அல்லது கல்லணைக்கோ, அல்லது அருகில் உள்ள மாவட்டங்களுக்கோ செல்லவேண்டிய நிலை உள்ளது என்றும் எனவே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் கல்லாற்றின் குறுக்கே 33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட விஸ்வகுடி அணைக்கட்டு பகுதியை சுற்றுலா தலமாக்க வேண்டுமென்று இம்மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தனர். இவர்களின் கோரிக்கையினை ஏற்று விஸ்வகுடி அணைக்கட்டு பகுதியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொழுதுபோக்கு பூங்கா அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, பெரம்பலூர்–கடலூர் மாவட்டத்தினை இணைக்கும், திருவாளந்துறை–கீழகல்பூண்டி இடையே, கல்லாற்றின் குறுக்கே 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு உயர்மட்ட மேம்பாலம் கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே அமைந்துள்ள விளையாட்டு மைதானம், உள்விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் ஆகியவை அடங்கிய விளையாட்டு வளாகத்திற்கு **பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டு வளாகம்** என்று பெயர் சூட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

## ரூ.1,000 கோடி மதிப்பீட்டில்
## கடல் நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
09.08.2017 அன்று விழுப்புரத்தில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த
சிறப்பு அறிவிப்புகள்

**வி**ழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களிலுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்காக நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு, ஏற்கெனவே கொள்ளிடம் ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்தில், தற்போது 140 ஆண்டுகளில் இல்லாத கடும் வறட்சியால் நீர் ஆதாரம் குறைந்துவிட்டதால், விழுப்புரம் மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை முழுமையாக நிறைவேற்றும் வகையில், நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, மாற்று ஏற்பாடாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மரக்காணத்திலிருந்து விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி நகராட்சிகள், உளுந்தூர்பேட்டை, விக்கிரவாண்டி, சங்கராபுரம் பேரூராட்சிகள் மற்றும் உளுந்தூர்பேட்டை, கணை, விக்கிரவாண்டி, திருநாவலூர், மரக்காணம், வானூர் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் 1,000 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தினால் அந்த பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு நிலையான குடிநீர் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**விழுப்புரம் நகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம்**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் ஆசியுடன் விழுப்புரம் நகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். விழுப்புரம் நகராட்சியில் ஏற்கெனவே பாதாள சாக்கடைத் திட்டம், நகரின் மையப்பகுதியில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன் விழுப்புரம் நகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதியான பாணாம்பட்டு, சலமேடு, வழுவடத்தி, எருமணந்தங்கள், காரகுப்பம் ஆகிய பகுதிகளுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

❖ ❖ ❖

# ரூ.400 கோடி மதிப்பீட்டில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்படும் தடுப்பணைக்கு நிருவாக ஒப்புதல்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
16.08.2017 அன்று கடலூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த
சிறப்பு அறிவிப்புகள்

**மா**ண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்திலே கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோயில், ஆதலூர் குமாரமங்கலத்தில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ.400 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும் என மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவை விதி 110இன் கீழ் அறிவிப்பு செய்ததன் தொடர்ச்சியாக, விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. திட்ட அறிக்கை பரிசீலித்து, ஒப்புதல் வழங்கி பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

★ கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரம், மணிமுத்தாறு நதியில் தடுப்பணை ஒன்று புதிதாக கட்டப்படும்.

★ கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரத்தில் ஓடும் நதியில் தடுப்பணை ஒன்று புதிதாக கட்டப்படும்.

★ கடலூர் மாவட்டம், தெப்பக்குடி வட்டம், திட்டக்குடியில் வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும். இத்தடுப்பணைகளால் நிலத்தடி நீர் மட்டம் உயரும்.

★ கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் பிச்சாவரத்தில் முப்பணாறு வடிகாலின் குறுக்கே கடல்நீர் உட்புகுதலை தடுக்கும் ஒரு சுவர் அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய மாவட்ட அமைச்சர், உங்களுடைய மாவட்டத்தில் இருக்கிற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பகுதியிலே கடல்நீர் விளைநிலங்களில் புகுகின்றது, அதை தடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள்.

அதை நிறைவேற்றுகின்ற விதமாக, கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே வல்லம் படுகையில் அமைந்துள்ள கிராமங்கள் மற்றும் புவனகிரி வட்டம், ஆதிவடகாநல்லூர் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகுதலை தடுக்க சுவர் அமைப்பது குறித்து ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திட்ட அறிக்கை தயார் செய்யப்படும், திட்ட அறிக்கையின்படி பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலமாக 57 கிராமங்கள் பாதுகாக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல அம்மாவினுடைய அரசு, காட்டுமன்னார் கோயிலில் அரசு மற்றும் அறிவியல் கல்லூரி நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர், அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று புதிதாக காட்டுமன்னார்கோயிலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தோம். இந்த கல்லூரிக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என பெயர் சூட்டப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடலூர் மாவட்டத்தில் வெள்ளம் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக கடலூர், பண்ருட்டி, சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் ஆகிய பகுதியிலுள்ள பெரிய ஓடைகள், வடிகால், வாய்க்கால்களில் நீர் தடுக்கும் திறனை அதிகரித்தல் மற்றும் பழைய கொள்ளிடம் ஆற்றில் வெள்ள பாதிப்புகளை தடுத்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகிய நிரந்தர வெள்ள தடுப்பு பணிகள் 140 கோடி ரூபாய் மதிப்பில் செய்வதற்கு அந்தப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, நான் கடலூருக்கு வருகின்றபோதே உங்களுடைய அமைச்சர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எங்களுக்கு நிலையான குடிநீர் செய்துதர வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளை ஏற்று, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் வழியோர குடியிருப்புகளுக்கென நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பேரூராட்சிகள் மற்றும் ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு ஏற்கெனவே கொள்ளிடம் ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்தில் தற்போது 140 ஆண்டுகாலம் இல்லாத கடும்

வறட்சியால் நீர் ஆதாரம் குறைந்து விட்டதால், கடலூர் மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை முழுமையாக நிறைவேற்றும் வகையில், நிரந்தர தீர்வு காணும் பொருட்டு மாற்று ஏற்பாடாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு கடலூர் மாவட்டத்திலுள்ள திட்டக்குடி, பெண்ணாடம், மங்கலம்பேட்டை, வடலூர், குறிஞ்சிப்பாடி, கன்னிகொண்டான் பேரூராட்சிகள் மற்றும் விருத்தாசலம், நல்லூர் மற்றும் மங்கலூர் ஊராட்சி முதலிய ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறுகிற வகையில் சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும். இந்த திட்டத்தின் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ள பேரூராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு நிலையான குடிநீர் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

❖ ❖ ❖

# குடவாசலில் தொடங்கப்படும் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பெயர்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
19.08.2017 அன்று திருவாரூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த
சிறப்பு அறிவிப்புகள்

**வ**லங்கைமான் வட்டத்தில் உள்ள வலங்கைமான் மற்றும் அரித்துவாரமங்கலம், காவல் நிலையங்களை தஞ்சாவூர் மாவட்ட காவல் சரகத்தில் இருந்து மாற்றப்பட்டு, திருவாரூர் மாவட்ட காவல் சரகத்துடன் சேர்க்கப்படும்.

வலங்கைமான் மற்றும் ஆலங்குடி மின்வாரிய அலுவலகங்களை தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தில் இருந்து, திருவாரூர் மின்பகிர்மான வட்டத்தில் சேர்க்கப்படும்.

மன்னார்குடி வட்டம் சவளக்காரன் கிராமத்தில் 110 KV திறன் கொண்ட துணை மின் நிலையம் நிறுவப்படும்.

குடவாசல் பேருந்து நிலையத்திற்கு புதிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி மேம்படுத்தப்படும்.

குடவாசல் ஒன்றியம் மணப்பறவை – குடவாசல் பேரூராட்சி ஏரூர்ந்தவாடி வழியாக, கும்பகோணம் சாலையை இணைக்கும் வகையில், சோழசூடாமணி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் மற்றும் சுற்றுச்சாலை அமைக்கப்படும்.

மன்னார்குடி நகராட்சியையும் – கர்த்தநாதபுரத்தையும் இணைக்கும் வகையில் பாமிணி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்கப்படும்.

உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு.காமராஜ் அவர்கள் எங்கள் பகுதியிலே அதிக தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்று நிலத்தடி நீரை செறிவூட்ட வேண்டும் ஆங்காங்கே தேங்குகின்ற மழைநீர் ஓடைகளின் இடையிலே தடுப்பணைகள் கட்டப்பட்டு தண்ணீரை தேக்கி விவசாயத்திற்கு தேவையான நீரை தேக்கிவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அவருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல குடவாசலிலே மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரியை துவக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். மாண்புமிகு அம்மாவுடைய அரசு இக்கல்லூரியை இந்த ஆண்டே தொடங்குவதற்கு அனுமதி அளித்து கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் பேசும் போது குடவாசலில் புதிதாக அம்மாவின் அரசால் தொடங்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்று பெயர் சூட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். அவரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கோபால் அவர்களும் கோரிக்கை வைத்தார். இருவரும் சேர்ந்து அந்த கல்லூரிக்கு பெயர் சூட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களது கோரிக்கையை ஏற்று அக்கல்லூரிக்கு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்று பெயர் சூட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

## ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்திற்கு கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.08.2017 அன்று அரியலூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**ஜெ**யங்கொண்டம் அனல் மின் திட்டத்திற்கென கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நஷ்டஈடு வழங்குவது குறித்து ஆய்வு செய்ய ஒரு உயர்மட்டக் குழு அமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் விரைந்து நஷ்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உடையார்பாளையம் வட்டம், வான்குடி கிராமத்தில் வெண்ணங்குழி ஓடையின் குறுக்கே பாலம் கட்டப்படும்.

திருமாணர் ஒன்றியம், வாரணவாசி கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலையில், மருதையாற்றின் குறுக்கே கூடுதலாக ஒரு பாலம் அமைத்து, சீரான போக்குவரத்துக்கு வழிவகை செய்யப்படும்.

அரியலூர் ஊராட்சி, இடையாத்தன்குடி கிராமத்தில், பெரிய திருக்கோணம் சாலையில் ஓர் உயர்மட்ட பாலம் கட்டப்படும்.

அரியலூர் மாவட்டம், மணக்கால் கிராமத்தில் ஒரு கால்நடை கிளை நிலையம் ஏற்படுத்தப்படும்.

அரியலூர் மாவட்டம், கல்லங்குறிச்சி கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படும்.

அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியத்தை சார்ந்த பழமைவாய்ந்த கரைவெட்டி பறவைகள் சரணாலயம் மேம்படுத்தப்பட்டு, பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள ஏரி தூர்வாரி புதுப்பிக்கப்படும்.

❖ ❖ ❖

# காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புதிய மீன்பிடித் துறைமுகம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 30.08.2017 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**கா**ஞ்சிபுரம் நகரத்தில் உள்ள செங்கழு நீரோடை தெரு "டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சாலை" எனவும், கிழக்கு ராஜ வீதி "டாக்டர் புரட்சித்தலைவி அம்மா சாலை" எனவும் பெயரிடப்பட்டு அழைக்கப்படும்.

காஞ்சிபுரம் நகரத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கம், "பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கம்" என பெயர் மாற்றம் செய்யப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தில் உள்ள திருப்புலிவனம் கிராமத்தில் இயங்கி வரும் உத்திரமேரூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி "புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி" என பெயர் சூட்டப்படும்.

காஞ்சிபுரம் அருகில் கீழ்கதிர்பூர் கிராமத்தில் காஞ்சிபுரத்திற்கென புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

காஞ்சிபுரம் மற்றும் திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

**தடுப்பணைகள் கட்டுதல்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழைக்காலங்களில் வெள்ள நீர் பாலாறு வழியாக வீணாக கடலில் கலப்பதை தடுக்கும் பொருட்டு, பாலாற்றின் குறுக்கே, மதுராந்தகம் வட்டம், ஈசூர்–வள்ளிபுரம்; வாலாஜாபாத் வட்டம், வெங்குடி மற்றும் உள்ளாவூர்; திருக்கழுக்குன்றம் வட்டம், வாயாலூர்; செங்கல்பட்டு வட்டம், பழவேலி மற்றும் பாலூர்; காஞ்சிபுரம் வட்டம், வெங்கடாபுரம் ஆகிய ஏழு இடங்களில் தடுப்பணைகள் கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

திருக்கழுக்குன்றம் வட்டம், நல்லாத்தூர் கிராமத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், திருக்கழுக்குன்றம் வட்டத்தில் வாயலூர் கிராமத்தின் அருகே நிலத்தடி நீர் மாசுபடாத வண்ணம் கடல்நீர் உள்புகாமல் தடுப்பதற்கு, தரைமட்ட தடுப்பணை கட்ட கோரிக்கை எழுந்துள்ளதால், விரிவான ஆய்வு மேற்கொண்டு தடுப்பணை கட்டுவதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் ஏதுமின்மையால், இம்மாவட்ட மீனவ மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு, விழுப்புரம் மாவட்டம், கழிவேலி பக்கிங்காம் கால்வாயின் முகத்துவாரத்தில் இரு பக்கங்களிலும் ஆலம்பரி குப்பம் மற்றும் அழகன் குப்பத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

## ரூ.5.03 கோடி மதிப்பீட்டில் 22 சாலைகள் தார் சாலையாக தரம் உயர்வு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 03.09.2017 அன்று திருவள்ளூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

அறுபடை வீடுகளில் ஒன்றான அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அமைந்துள்ள திருத்தணி நகராட்சியில் தினந்தோறும் சுமார் 12 ஆயிரம் நபர்களுக்கு மேல் வந்து செல்வதாலும், பக்தர்கள் வருகை நாளுக்கு நாள் அதிகமாவதாலும் தனியார்–பொதுமக்கள் பங்களிப்புடன் (PPP) புதிய பேருந்து நிலையம் திருத்தணி நகராட்சியில் அமைக்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொன்னேரி பேரூராட்சிப் பகுதி மிக விரைவாக வளர்ந்து வரும் அதிக மக்கள் தொகை கொண்ட பகுதியானதால், பொது மக்கள் பயன்பெறும் வகையிலும், பொது சுகாதாரத்தை பேணிக்காக்கும் வகையிலும், பொன்னேரி பேரூராட்சியில் புதியதாக பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் புதியதாக தோற்றுவிக்கப்பட்டு தற்போது வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் ஆவடி மற்றும் மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டடம் மற்றும் வட்டாட்சியருக்கான குடியிருப்பும் கட்டப்படும்.

திருவள்ளூர் நகரைச் சுற்றிலும் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில் இருந்தும், இரயில் நிலையத்திலிருந்தும் தினமும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஒரே பிரதான சாலை வழியாக பயணிக்க நேரிடுகிறது. இதனால் பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் கடும் போக்குவரத்து நெரிசலால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். பொதுமக்களின் நலன் கருதி திருவள்ளூர் நகரைச் சுற்றி ஈக்காடு சொசைட்டி நகர் முதல் காக்களூர் சாலை வரை 3 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாற்றுப்பாதை அமைக்கப்படும்.

சென்னைக்கு மிக அருகில் அமைந்துள்ள, வேகமாக வளர்ந்து வரும் திருவள்ளூர் மாவட்டத்திற்கு உட்பட்ட 9 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 15 ஊராட்சிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 22 சாலைகள் தார் சாலைகளாக தரம் உயர்த்தப்படும்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வட்டம் தண்டுரை கிராமத்திலுள்ள (பட்டாபிராம்) தமிழ்நாடு அரசின் சதர்ன் ஸ்ட்ரக்சுரல் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தில் ஒரு பல்நோக்கு தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, கும்மிடிப்பூண்டி மற்றும் திருவொற்றியூர் ஆகிய மூன்று வட்டங்களின் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவ சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் பொன்னேரி வட்டம், பொன்னேரி பகுதியில் மீனவ சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்காக அமைக்கப்பட்டுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர் சூட்டப்படும்.

திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள் பள்ளிப்பட்டு வட்டத்திலிருந்து ஆர்.கே. பேட்டை பகுதியை பிரித்து புதிய வட்டம் உருவாக்க விடுத்த கோரிக்கையினை அரசு பரிசீலித்து ஆவன செய்யும்.

❖ ❖ ❖

# பூனாட்சி கிராமத்தில் துணை மின் நிலையம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.09.2017 அன்று ஈரோட்டில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**த**ற்போது பூனாட்சி கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு அந்தியூர், கோனேரிப்பட்டி மற்றும் சென்னம்பட்டி 110 கிலோ வோல்ட் துணை மின்நிலையங்களிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. பூனாட்சியில் அமைந்துள்ள ஸ்பேக் குச்சி கிழங்கு மில் அருகில் மின் விநியோகத்தை மேம்படுத்தும் பொருட்டும் மற்றும் பெருகி வரும் மின் பளுவை கருத்தில் கொண்டும், பூனாட்சி கிராமத்தில் உள்ள 1.22 ஏக்கர் நிலத்தில் ஒரு புதிய 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள சிக்கய்யநாயக்கர் கல்லூரியானது இந்த மாவட்டத்திலேயே முதன் முதலாக தொடங்கப்பட்ட மிகப் பழமையான கல்லூரியாகும். இக்கல்லூரியை அரசே ஏற்று நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஈரோடு இரயில் நிலையத்திலிருந்து ஆனைக்கல்பாளையம் ரிங் ரோடு வரையிலான சாலையில் கி.மீ 4/6 முதல் கி.மீ 8/2 வரை உள்ள சாலையை மையத்தடுப்புடன் கூடிய நான்கு வழிப் பாதையாக அகலப்படுத்தப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ஒரு மாநகராட்சி, நான்கு நகராட்சி மற்றும் 42 பேரூராட்சி பகுதிகளில் 2015–2016 முதல் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் கட்டி வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், 7,500 வீடுகள் கட்ட ஆணைகள் வழங்கப்படும்.

அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தை சேந்த பட்லூர் மாத்தூர் ஊராட்சிகளுக்கு ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ளாந்தியூர் மற்றும் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பாட்டில் இருக்கும் கூட்டுக் குடிநீர் திட்டத்தினை அபிவிருத்தி செய்து மேற்படி ஊராட்சி பகுதியிலுள்ள 58 ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பவானி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த மயிலம்பாடி ஊராட்சி பயன் பெறும் வகையில் ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள வரதநல்லூர் மற்றும் 53 ஊராட்சி குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தினை அபிவிருத்தி செய்து மேற்படி ஊராட்சியைச் சேர்ந்த 54 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பர்கூர் மலையிலுள்ள மணியாச்சி பள்ளித்திலிருந்து தண்ணீரை புனல் வழியாக, அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணைக்கு கொண்டு வருவதற்கு முதற்கட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

அந்தியூர் நகரத்தில் போக்குவரத்து நலன் கருதியும் பொதுமக்களில் பாதுகாப்பு கருதியும் வாகன ஓட்டிகள் சீராக செல்லவும் அந்தியூர் பிரதான சாலையில் மைய தடுப்புச் சுவர் அமைக்கப்படும்.

மக்கள் அனைவரும் உரிய காலத்தில் உயர் சிகிச்சை பெற ஏதுவாக ஈரோட்டில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் உயர் சிகிச்சை பிரிவு, JICA நிதியுவியுடன் அமைக்கப்படும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான மருத்துவக் கல்லூரியை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கீழுள்ள மருத்துவக் கல்வி இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் அரசு மருத்துவக் கல்லூரியாக மாற்ற பரிசீலிக்கப்படும்.

ஈரோட்டிலிருந்து அக்ரஹாரம் பவானி சாலை உள்ளிட **தொப்பூர்– மேட்டூர் – பவானி சாலை**யை நான்குவழிச்சாலையாக அகலப்படுத்த தேசிய நெடுஞ்சாலை அலகில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையை நான்குவழிச்சாலையாக அகலப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**பவானி நகரத்திற்கு 8.184 கி.மீ நீளத்திற்கு புறவழிச் சாலை** அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் நில எடுப்பிற்காகவும் ரூ.7.16 கோடி நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது நில ஆர்ஜிதம் செய்யும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. **நில எடுப்புப் பணிகள் முடிவடைந்தவுடன் புறவழிச் சாலை அமைக்கப்படும்.**

அந்தியூர் – அம்மாப்பேட்டை சாலையில் 11 கிமீ நீளச் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் ரூ.10 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

கோபி முதல் சித்தோடு வரை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

மேட்டுப்பாளையம் முதல் சத்தி வரையிலும், சத்தி முதல் அத்தானி வழியாக பவானி வரை உள்ள சாலை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தப்படும்.

பவானி–ஈரோடு–கரூர் சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தி மேம்படுத்துவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய பணப் பயிரான மஞ்சள், தற்போது கருமாண்டி செல்லிப்பாளையம், செம்மாம்பாளையம், ஈரோடு மற்றும் கோபிசெட்டிப்பாளையம் ஆகிய நான்கு இடங்களில் மறைமுக ஏல முறையின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இந்த மறைமுக ஏல முறையினை நவீனப்படுத்தும் விதமாக, 08.03.2017 முதல் மின்னணு முறை வணிகத்திற்கான மென்பொருள், சோதனை அடிப்படையில் பெருந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக நடைபெற்று வருகிறது. இந்த மின்னணு முறை வணிகம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஏல மையங்களையும் ஒரே மென்பொருளின் கீழ் ஒருங்கிணைத்து (Unified Market Platform), ஒரே நேரத்தில் மின்னனு ஏல முறையை நடைமுறைப்படுத்தி, காலை 9 மணி முதல் 11.30 மணி வரை (மின்னணு ஏல காலம்) ஏலம் நடத்திட அரசு பரிசீலனை செய்யும்.

❖ ❖ ❖

## திருவண்ணாமலை – வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.09.2017 அன்று வேலூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**மே**ட்டூர் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, வேலூர் மாவட்டத்திலுள்ள 11 பேரூராட்சிகள் மற்றும் 4917 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர்த் தேவையினை முழுமையாக தீர்க்கும் வகையில் திருவண்ணாமலை – வேலூர் கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் வேலூர் மாவட்டத்திலுள்ள 21 இலட்சத்து 47 ஆயிரம் மக்களும், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 25 இலட்சத்து 91 ஆயிரம் மக்களும், மற்றும் காஞ்சீபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 2 இலட்சத்து 70 ஆயிரத்து 458 மக்களும் பயன் பெறுவார்கள்.

வேலூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டத்தில் அமைந்துள்ள ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்க அணையை சுற்றுலா பயணிகளும், பொது மக்களும் கண்டு களித்து இன்புறும் வகையில் சுற்றுலாத் தலமாக மேம்பாடு செய்யப்படும். இது தொடர்பான பணிகள் இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாதனூர் ஒன்றியம் பாலூரில் புதியதாக திறக்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என பெயர் சூட்டப்படும்.

அரக்கோணம் மற்றும் நெமிலி ஆகிய இரு வட்டங்களையும் இணைத்து அரக்கோணத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் கோட்டம் உருவாக்க வேண்டும் என்று அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். ரவி அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார். இக்கோரிக்கையை அரசு கவனத்தோடு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்று மாண்புமிகு அம்மாவின் அரசு சில சலுகைகளை அறிவித்துள்ளது. ஜனவரி 2017 முதல் ஆகஸ்ட் 2017 வரை உள்ள சம்பள நிலுவைத் தொகையை விதிகளுக்கு உட்பட்டு மிகவிரைவில் வழங்கும்.

தற்சமயம் மாற்றுப் பணியில் 60 தொழிலாளர்களுக்கு பணிமாற்றம் அரசு பொது நிறுவனங்களில் செய்யப்பட்டுள்ளது. மேலும் மாற்றுப் பணியில் செல்ல விருப்பம் உள்ள மற்ற தொழிலாளர்களுக்கும் மாற்றுப் பணியில் அரசு பொது நிறுவனங்களில் தொடர்ந்து பணி வழங்கப்படும்.

பணிக்கொடை சட்டத்தின் அடிப்படையில் மீதமுள்ள தொழிலாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் முழுமையாக பணிக்கொடை, ஈட்டிய விடுப்புக்கான பணத்தொகை மற்றும் வருங்கால வைப்புநிதித் தொகை வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

## 3.57 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 17.09.2017 அன்று நாமக்கல்லில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**நா**மக்கல் மாவட்டம் ஆலாம்பாளையம், படவீடு பேரூராட்சிகள் மற்றும் திருச்செங்கோடு, பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 669 ஊரக குடியிருப்புகள் மற்றும் சேலம் மாவட்டம் சங்ககிரி பேரூராட்சிகளுக்கு காவேரி ஆற்றினை நீராதாரமாக கொண்டு குடிநீர் வழங்கும் பொருட்டு, 3 இலட்சத்து 57 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு, இந்தப் பகுதி மக்களுக்கு தங்குதடையின்றி பாதுகாப்பட்ட காவேரி தண்ணீர் வழங்கப்படும் என்ற செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு நகராட்சிக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீர் திட்டம் மேம்படுத்தப்பட்டு, சுமார் 1 இலட்சத்து 6 ஆயிரம் மக்கள் பயன் பெறும் வகையில் வரும் நிதியாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

நாமக்கல் மாவட்டத்திலுள்ள நாமக்கல் பரமத்திவேலூர், சேந்தமங்கலம் வருவாய் வட்டங்களிலிருந்து வருவாய் கிராமங்களைப் பிரித்து, மோகனூரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதியதாக மோகனூர் வருவாய் வட்டம், விதிகளுக்குட்பட்டு அமைத்திட அரசு பரிசீலனை செய்யும்.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் தற்போது நிலவி வரும் போக்குவரத்து நெரிசலை போக்கும் விதமாக, ஒரு புறவழிச் சாலை அமைக்கப்படும். இதன் முதற்கட்டமாக, 6 கிலோமீட்டர் சாலையும், இரண்டாம் கட்டமாக, 5 கிலோமீட்டர் சாலையும் அமைக்கப்படும்.

குமாரபாளையம் – பள்ளிப்பாளையம் – ஜேடர்பாளையம் – பாண்டமங்கலம் – வேலூர் சாலையில் (மாநில நெடுஞ்சாலை–198) பள்ளிப்பாளையம் இரயில்வே நிலையத்திற்கு அருகே, பொதுமக்கள் பாதுகாப்பினை கருதி, சாலையை சுலபமாக கடந்திட, ஒரு சுரங்கப்பாதை அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

# ரூ.170 கோடி மதிப்பீட்டில் 14,470 மீனவர்கள் பயன்பெறும் வகையில் நவீன மீன்பிடித் துறைமுகம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.09.2017 அன்று நாகப்பட்டினத்தில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**நா**கப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் 170 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,054 விசைப்படகுகளும், 6,917 கண்ணாடி நாரிழை படகுகளும் பாதுகாப்பாக நிறுத்துவதற்கான வசதி, பிரதான மற்றும் துணை அலை தடுப்புச்சுவர்கள், மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, அலுவலக கட்டிடம், சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளுடன் கூடிய நவீன மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும். வரும் நிதியாண்டில் இத்திட்டப் பணிகள் துவக்கப்படும். இத்திட்டத்தினால் தரங்கம்பாடி உள்ளிட்ட சின்னமேடு, சின்னங்குடி, தாழம்பேட்டை, புதுப்பேட்டை, பெருமாள்பேட்டை, வெள்ளகோவில், குட்டியான்டியூர், சந்திரபாடி மற்றும் சின்னூர்பேட்டை பத்து கிராமங்களில் உள்ள 14,470 மீனவர்கள் பயனடைவார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளம் மீனவ கிராமத்தில் 152 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 100 விசைப் படகுகள் மற்றும் 1,000 கண்ணாடி நாரிழை படகுகளும், பாதுகாப்பாக நிறுத்துவதற்கான வசதி, பிரதான மற்றும் துணை அலை தடுப்பு சுவர்கள், மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, அலுவலகக் கட்டிடம், சாலை வசதிகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய ஒரு நவீன மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படும். வரும் நிதியாண்டில் இப்பணிகள் துவக்கப்படும். இத்திட்டத்தினால் காமேஸ்வரம், விழுந்தமாவடி, வானவன்மகாதேவி, வெள்ளப்பள்ளம், நாலுவேதபதி, புஷ்பவனம் ஆகிய 6 மீனவ கிராமங்களைச் சார்ந்த 7,176 மீனவர்கள் பயனடைவார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் ஒரு நவீன மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியகூறு ஆய்வுகள் உடனடியாக மேற்கொள்ளப்படும். இந்த ஆய்வுக்குத் தேவையான நிதி இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தினால் ஆற்காட்டுத்துறை உள்ளிட்ட மணியன்தீவு, கோடியக்காடு, கோடியக்கரை,

செருதலைக்காடு, பன்னல், சிந்தாமணிக்காடு, அன்னபேட்டை, கோவில்தாவு, வெள்ளமணல், வாய்மேடு ஆகிய 11 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் பயன் பெறுவார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகராட்சியில் தற்போது இரண்டு பேருந்து நிலையங்கள் இயங்கி வருகின்றன. இருப்பினும், இங்கு நிலவி வரும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் விதமாக நகராட்சிக்கு அருகே உள்ள மணக்குடி கிராமத்தில் புதிய பேருந்து நிலையம் தனியார் பங்களிப்புடன் (PPP Mode) சுமார் 13.77 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மழைக்காலத்தில் வீணாகும் உபரிநீரினை சேமிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்திடும் வகையிலும், கடல் நீர் உட்புகாமல் தடுத்திடும் பொருட்டும்,

சீர்காழி வட்டம், காவேரி பூம்பட்டினம், தர்மகுளம் அருகில் காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும்,

சீர்காழி வட்டம், திருநகரியில், வெள்ளப்பள்ளம் உப்பனாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும்,

வேதாரண்யம் வட்டம், ஏகராசபுரத்தில் சக்கிலிய வாய்க்கால் குறுக்கே ஒரு தடுப்பணையும், வரும் நிதியாண்டில் (2018–2019) கட்டப்படும்.

மேலும் அடுத்த நிதியாண்டில் (2019–2020), கீழ்வேளூர் வட்டம், கருவேலங்கடையில் கடுவையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தஞ்சாவூர், மன்னார்குடி, திருத்துறைபூண்டி, வேதாரண்யம் வழியாக கோடியக்கரையை இணைக்கும் 106.86 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் வழியாக செல்கிறது. இம் மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்திட மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை நகராட்சிக்கு 16.880 கிலோமீட்டர் நீளமுள்ள புறவழிச்சாலை அமைக்கப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் காவல் உட்கோட்டத்திலுள்ள திட்டச்சேரி காவல் நிலையம் மற்றும் நாகூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கிராமங்களை பிரித்து பொதுமக்களின் நலன் கருதி நாகூர் வட்டம் திருக்கண்ணபுரத்தில் ஒரு புதிய காவல் நிலையம் தோற்றுவிக்க இந்த அரசு பரிசீலனை செய்யும்.

நாகப்பட்டினம் மீனவ பல்கலைக்கழகத்திற்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் பெயர் சூட்டப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரடியம்புலம் மீனவ கல்லூரிக்கு பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய பெயர் சூட்டப்படும்.

அதேபோல, புதிதாக துவங்கப்பட்ட சீர்காழி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய பெயர் சூட்டப்படும் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

❖ ❖ ❖

## ஒசூர் நகருக்கு வெளிவட்ட சாலை அமைக்க ரூ.145 கோடிக்கு நில எடுப்பு பணி!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.09.2017 அன்று கிருஷ்ணகிரியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

### அலியாளம் அணைக்கட்டு வலதுபுறக் கால்வாய் நீட்டிப்பு செய்தல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அலியாளம் பகுதியில் ஒரு அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. இந்த அணைக்கட்டிலிருந்து ஏற்கெனவே ஒரு வலதுபுறக் கால்வாயானது 8,960 மீட்டர் தொலைவிற்கு கட்டப்பட்டுள்ளது. இதில் 8,800 மீட்டர் தொலைவிலிருந்து புதியதாக 19.85 கிலோ மீட்டர் நீளத்திற்கு பிரதான கால்வாயும், 1.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு கிளைக்கால்வாய் அமைக்கப்பட்டு, வெள்ளக் காலங்களில் வரக்கூடிய உபரி நீர் ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டங்களில் உள்ள 12 ஏரிகளுக்கும், மேலும் தருமபுரி மாவட்ட மக்கள் வேண்டுகோளினை ஏற்று அங்கு உள்ள தூள்செட்டி ஏரிக்கு நீர் கொண்டு செல்ல வழிவகை செய்யப்படுகிறது. இதன் மூலம் 869 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். இந்தப்பணி உடனடியாகச் செயல்படுத்தப்படும்.

அதேபோல, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலக்கட்டத்திலே என்னைகொல்புதூர் கால்வாய் வெட்ட ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார்கள். அம்மாவினுடைய ஆட்சியிலே முதற்கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

### அரசம்பட்டி மற்றும் பெண்டரஅள்ளியில் தடுப்பணைகள்

கிருஷ்ணகிரி மாவட்டம் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அரசம்பட்டி மற்றும் பெண்டரஅள்ளி ஆகிய இரு இடங்களில் தடுப்பணைகள் கட்டித் தரப்படும்.

**கொடியாளம் அணைக்கட்டிலிருந்து 25 ஏரிகளுக்கு மின்விசைப்பம்பு மூலம் நீரேற்றம் செய்ய ஆய்வு மேற்கொள்ளுதல்**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், பெண்ணையாற்றின் குறுக்கே கொடியாளம் பகுதியில் ஏற்கெனவே ஒரு அணைக்கட்டு உள்ளது. இந்த அணைக்கட்டின் அருகே ஒரு கிணறு அமைத்து அதிலிருந்து மின் விசை பம்ப் மூலம் குழாய் வழியாக நீரேற்று முறையில் சுமார் 25 ஏரிகளுக்கு நீரினைக் கொண்டு செல்வதற்காக உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு நிலத்தடி நீர் செறிவூட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**புதிய நீர்வரத்து கால்வாய் அமைக்க ஆய்வு**

கிருஷ்ணகிரி மாவட்டம் தாமோதரஹள்ளி ஊராட்சி சந்தனூர் ஏரியிலிருந்து பாப்பாரப்பட்டி ஊராட்சி கொட்டாவூர் ஏரிக்கு புதியதாக நீர்வரத்து கால்வாய் அமைக்கவும் மேலும் கும்பாரஹள்ளி ஊராட்சி பச்சனம்பட்டி ஏரியிலிருந்து பட்டகரஉறள்ளி ஏரிக்கு புதியதாக நீர்வரத்து கால்வாய் அமைக்கவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

**பொதுப்பணித்துறைக்கு புதிய அலுவலகங்கள்**

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு, கிருஷ்ணகிரியை தலைமை இடமாகக் கொண்டு ஒரு புதிய கட்டட (கட்டடம் மற்றும் பராமரிப்பு) கோட்டம் உருவாக்கப்படும்.

**சூளகிரி புறவழிச்சாலை**

சூளகிரி நகருக்கு புறவழிச்சாலை அமைக்கப்படும். இப்புறவழிச்சாலைக்கு 4 இலட்சம் ரூபாய் செலவில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணி நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

**தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாத்தகோட்டா சாலையில் உயர்மட்ட பாலம்**

வி.சி.சி சாலை முதல் பாத்தகோட்டா சாலை கி.மீ.2/6இல் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் 3 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

**ஓசூர் நகருக்கு வெளிவட்ட சாலைக்கான நில எடுப்பு பணி**

ஓசூர் நகருக்கு வெளிவட்ட சாலை அமைக்க 145 கோடி ரூபாய்க்கு நில எடுப்பு பணி மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**தளி சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்க திட்ட அறிக்கை**

ஓசூர் மற்றும் ஆனைக்கல் இரயில் நிலையங்களுக்கு இடையில் தளி சாலையில் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**நாட்றாம்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்**

கிருஷ்ணகிரி மாவட்டம் தளி ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள நாட்றாம்பாளையம் கிராமம் மலைப்பகுதியில் அமைந்துள்ளதால் பொதுமக்கள் தற்போது சுகாதாரத் தேவை பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அப்பகுதி மக்கள் நலன் கருதி நாட்றாம்பாளையம் கிராமத்தில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

**புதிய துணை இயக்குநர் (குடும்பநலம்) அலுவலகம்**

கிருஷ்ணகிரி மாவட்டம் பிரிந்த பிறகும் சுகாதாரத்துறை குடும்ப நலத் துணை இயக்குநர் அலுவலகமானது தொடர்ந்து தருமபுரியிலேயே இயங்கி வருகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு என தனியாக ஒரு துணை இயக்குநர் (குடும்ப நலம்) அலுவலகம் அமைக்கப்படும்.

**ஓசூர் நகரம் அருகே வர்த்தக ஊக்குவிப்பு மையம்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் நகரமானது வளர்ந்து வரக்கூடிய ஒரு தொழில் நகரமாகும். இங்கு ஆட்டோமொபைல் உற்பத்தி தொழிற்சாலைகள், எலக்ட்ரானிக்ஸ் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், விமான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியன செயல்பட்டு வருகின்றன. இத்துடன் கிரானைட் மெருகூட்டும் தொழிலும் உலக அளவில் பெருமைப்படத்தக்க வகையில் செயல்பட்டு வருகிறது. மேலும் கொய் மலர், பட்டு, மாங்கூழ் போன்ற பல விவசாயம் சார்ந்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழில்களும் சிறப்பாக செயல்பட்டு வருவதைக் கருத்தில் கொண்டு ஓசூர் – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் சூலகிரி அருகே சிட்கோ மற்றும் தொழில் மற்றும் வர்த்தக சங்கங்கள் ஒருங்கிணைந்து ஒரு வர்த்தக ஊக்குவிப்பு மையம் செயல்படுத்தப்படும்.

**ஓசூரை மாநகராட்சியாக தரம் உயர்த்துதல்**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் நகராட்சி கடந்த 2012ஆம் ஆண்டு முதல் சிறப்புநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நகரமயமாக்குதல் காரணமாக ஓசூர் நகராட்சியை ஒட்டியுள்ள அச்செட்டிபள்ளி, பேகேப்பள்ளி, சென்ன சந்திரம், கொத்தகொண்டப்பள்ளி, நல்லூர், ஒன்னல்வாடி, தொரப்பள்ளி அக்ரஹாரம், பேரண்டப்பள்ளி ஆகிய

8 ஊராட்சிகளை சேர்த்து ஓசூர் நகராட்சியை, மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும். இதனால் இப்பகுதி மக்களுக்கான அடிப்படை கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.

**கிருஷ்ணகிரியை சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்துதல்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நகராட்சியானது கடந்த 1984ஆம் ஆண்டு முதல் முதல்நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தற்போது கிருஷ்ணகிரி நகராட்சிக்கு அருகிலுள்ள வெங்கடாபுரம், அகசிப்பள்ளி, தேவசமுத்திரம், காட்டிநாயனப்பள்ளி, கட்டிகானப்பள்ளி, பெத்தனப்பள்ளி, கள்ளக்குறிச்சி மற்றும் பையனப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகளை கிருஷ்ணகிரி நகராட்சியுடன் இணைத்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படும்.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய குடிநீர் திட்டம்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 6 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 425 குடியிருப்புகளுக்கு முழுமையாக குடிநீர் வழங்கும்பொருட்டு, தென்பெண்ணை ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும். இதனால் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 668 பேர் நிரந்தர பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஓசூர் விளையாட்டு அரங்கிற்கு கூடுதல் விளையாட்டு அரங்கங்கள்**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் விளையாட்டு அரங்கம் விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்கள் நலன் கருதி, தற்போது 400 மீட்டர் தடகள ஓடு பாதை, கால்பந்து மைதானம், கையுந்து பந்து ஆடுகளம், கபாடி ஆடுகளம் மற்றும் கோ–கோ ஆடுகளம் ஆகிய கட்டமைப்பு வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இவ்விளையாட்டு அரங்கில், கூடுதலாக ஒரு கூடைப்பந்து ஆடுகளம், இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கம், நடைபாதை மற்றும் உடற்பயிற்சி கூடம் அமைத்துத் தரப்படும்.

❖ ❖ ❖

## ரூ.120 கோடி செலவில் புதிய மின் மாற்றிகள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் **30.09.2017** அன்று சேலத்தில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**சேலம் மாவட்டத்தில் ஏழு இடங்களில் புதிய தடுப்பணைகள் கட்டப்படும்.**

பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே லக்கம்பட்டி கிராமத்தில் ஒரு தடுப்பணை. பெரியபள்ளம் ஓடையின் குறுக்கே கொளத்தூர் கிராமத்தில் ஒரு தடுப்பணை. சுவேதா நதியின் குறுக்கே இரண்டு தடுப்பணைகள். வசிஷ்ட நதியின் குறுக்கே ஒரு தடுப்பணை.சித்தேரி ஊராட்சியில் மஞ்சினி ஓடையில் ஒரு தடுப்பணை. மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் பொன்னியாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை. ஆகவே, புரட்சித்தலைவி அம்மாவுடைய அரசு நிலத்தடி நீர் முழுமையும் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக பருவ காலங்களிலே பெய்கின்ற மழைநீர் முழுமையும் சேமிக்கப்பட்டு நிலத்தடி நீரை செருவூட்டுவதற்காக இந்த தடுப்பணைகள் கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பயிற்சி மையம் அமைக்கப்படும்.

பி.என்.பட்டி மற்றும் வீரக்கல்புதூர் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு புதிய குழாய் அமைக்கப்படும்.

**சங்ககிரி பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம் :**

சேலம் மாவட்டம், சங்ககிரி பேரூராட்சிக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு நாமக்கல் மாவட்டத்துடன் சேர்ந்து பயன்பெறும் வகையில் ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

**சேலம் மாநகருக்கு மேற்கு சுற்றுச்சாலை :**

சேலம் மாவட்டம் வழியாக செல்லும் தேசிய நெடுஞ்சாலைகள் எண்.43, 44, 47 மற்றும் 79 ஆகியவைகளை ஒருங்கிணைத்து சந்தியூரில் தொடங்கி உத்தமசோழபுரம் வழியாக பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை அரபிக் கல்லூரி வரை 21 கி.மீ. நீளமுள்ள மேற்கு சுற்றுச்சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக அமைக்கப்படும்.

**ஆத்தூர் புறவழிச் சாலை**

தாண்டவராயபுரம் அருகில் இருந்து காந்திபுரம் வரை சுமார் 11 கி.மீ. நீளத்திற்கு புறவழிச் சாலை அமைக்கப்படும்.

**சாலை மேம்பாலங்கள் / இரயில்வே மேம்பாலங்கள்:**

சேலம் மாநகர் இரும்பாலை சாலை சந்திப்பில் ஒரு புதிய மேம்பாலம்.

நான் குறிப்பிட்டவை எல்லாம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற போதே அறிவித்த திட்டங்கள்.

தொளசம்பட்டி சாலை கி.மீ. 8/4இல் ஒரு உயர் மட்டப் பாலம்.

முள்ளுவாடி சாலையில் வசிஷ்ட நதியின் குறுக்கே கி.மீ.0/2இல் உள்ள பழைய பாலத்திற்கு பதிலாக புதிய உயர் மட்ட பாலம் கட்டப்படும்.

ஓமலூர்–மேச்சேரி சாலை கி.மீ.0/4இல் உள்ள கடவு எண்.10க்கு மாற்றாக இரயில்வே கி.மீ.9/1–2இல் ஓமலூர் மற்றும் தொளசம்பட்டி இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் கட்டப்படும்.

தொளசம்பட்டி சாலை (ODR) கிமீ.7/2இல் இரயில்வே கடவு எண்.15–க்கு பதிலாக இரயில்வே கி.மீ.15/13–16இல் துளசம்பட்டி மற்றும் மேச்சேரி இரயில்வே நிலையங்களுக்கிடையில் சாலை மேம்பாலம் கட்டப்படும்.

தாரமங்கலம் – நங்கவள்ளி – குஞ்சாண்டியூர் சாலை (மாநெ223) கி.மீ.17/10இல் இரயில்வே கடவு எண்.21–க்கு பதிலாக இரயில்வே கி.மீ.31/9–10இல் மேச்சேரி மற்றும் மேட்டூர் அணை இரயில் நிலையங்களுக்கிடையில் சாலை மேம்பாலம் கட்டப்படும்.

ஆத்தூர்–பெரம்பலூர் சாலை கி.மீ.0/2இல் (மாநெ157) இரயில்வே கடவு எண் 131க்கு பதிலாக இரயில்வே கி.மீ.139/100–200இல் சின்ன சேலம் மற்றும் ஆத்தூர் இரயில்வே நிலையங்களுக்கிடையில் சாலை மேம்பாலம் கட்டப்படும்.

சேலம்–திருப்பத்தூர்–வாணியம்பாடி சாலை கி.மீ.0/2இல் (மாநெ 18) இரயில்வே கடவு எண் 169க்கு பதிலாக இரயில்வே கி.மீ.182/2–3இல் மின்னாம்பள்ளி மற்றும் சேலம் இரயில் நிலையங்களுக்கிடையில் சாலை மேம்பாலம் கட்டப்படும்.

கருப்பூர் எல்காட் வளாகத்தில் ரூ.80 கோடி செலவில், நவீன தொழில் நுட்பத்துடன் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்ட புதிய 230 கி.வோ துணை மின்நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நகராட்சிகள், பேரூராட்சி பகுதிகளில் மற்றும் பெரிய பஞ்சாயத்து பகுதிகளில் புதிய மின் மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்) ரூ.120 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சேலம் மாநகராட்சி அண்ணா பூங்காவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும்.

❖ ❖ ❖

# ரூ.7 கோடி மதிப்பீட்டில் இருவழிப் பாதையுடன் கூடிய ஒரு புதிய பாலம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
04.10.2017 அன்று கரூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த
சிறப்பு அறிவிப்புகள்

**க**ரூர் மாவட்டம், காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மாயனூர் கதவணைக்கு செல்லும் வழியில் உள்ள கால்வாய்களின்மேல் புதிய பாலங்கள் கட்டப்படும்.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூர் கிராமத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே கதவணையுடன் கூடிய இருவழிச்சாலை பாலம் அமைக்கப்பட்டுள்ளது. காவிரிக் கரையின் வலது கரைக்குப் பின்புறம் அதனை ஒட்டியே அடுத்தடுத்து தென்கரைக் கால்வாய், கிருஷ்ணராயபுரம் கால்வாய், புதுக்கட்டளை மேட்டு வாய்க்கால் ஆகிய மூன்று பாசன வாய்க்கால்கள் உள்ளன.

அவற்றின் குறுக்கே தற்போது மதகுகளுடன் கூடிய ஒரு பழைய ஒருவழிப்பாதை பாலம் உள்ளது. இது போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, இந்தப் பழைய பாலங்களுக்கு அருகிலேயே ஒரு புதிய இருவழிப்பாதையுடன் கூடிய 80 மீட்டர் நீளமுள்ள பாலம் சுமார் ஏழு கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

சின்னதாராபுரம் பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் கூடலூர் மேல்பாகம் ஊராட்சி, பெரியதிருமங்கலம் பகுதியில் அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்க கள ஆய்வு மேற்கொள்ளப்படும்.

தாந்தோணி ஒன்றியத்தில் 14 ஊராட்சிகளைச் சேர்ந்த 274 ஊரக குடியிருப்புகளில் உள்ள 64 ஆயிரத்து 320 மக்கள் பயன்பெறும் வகையிலான புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்த திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அடுத்த ஆண்டு இப்பணி மேற்கொள்ளப்படும்.

கரூர் மாவட்டம், பசுபதி பாளையம் காவல் நிலையத்தின் எல்லைகள் மிகவும் விரிவாகவும் அதிக மக்கள் தொகை கொண்டுள்ளதாகவும் உள்ளதால். தாந்தோணி மலையில் ஒரு புதிய காவல் நிலையம் ஏற்படுத்தப்படும்.

கரூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில் ஒரு சாலை மேம்பாலம் அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

**கரூர் நகரில் ஒரு புதிய அணுகு சாலை**

கரூர் நகரத்தில், கோவை ரோடு முதல் பைபாஸ் ரவுண்டானா வரை அமைந்துள்ள, கோவை சாலையில், மிகவும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் சிரமத்துக்குள்ளாகிறார்கள். எனவே, கரூர் நகராட்சி மூலம், கரூர் இரயில்வே சந்திப்பு முதல் சேலம்–மதுரை தேசிய நெடுஞ்சாலை வரை கரூர் நகருக்கு ஒரு புதிய அணுகு சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குளித்தலை நகரில் தற்போது இருக்கும் பேருந்து நிலையம் மிகவும் சிறியதாக உள்ளதால், பொதுமக்கள் சென்று வருவதற்கும், பேருந்துகள் சென்று வருவதற்கும் மிகவும் சிரமமாக உள்ளதைக் கருத்தில் கொண்டு, புதிய பேருந்து நிலையம் அமைக்கப் பரிசீலனை செய்யப்படும்.

கோவை–ஈரோடு தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் (NH–67) அதிக விபத்துகள் ஏற்படுவதால் கி.மீ.218/0 – 220/0 வரை உள்ள நான்கு வழிச்சாலைப் பகுதியில், விபத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒரு உயர்மட்டப் பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**கரூர் மாவட்டத்திற்கு மேம்பாலங்கள்**

கரூர் – ஈசநத்தம் – கூம்பூர் – வேடசந்தூர் சாலை கி.மீ. 17/6–இல் உள்ள தரைமட்டப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

வைரமடை–தொப்பம்பட்டி சாலை கி.மீ.16/6–இல் உள்ள குறுகிய பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டப்படும்.

செல்லிவலசு – வெண்ணெய் கோதூர் சாலை கி.மீ.0/2–இல் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

மணப்பாறை–குஜிலியம்பாறை சாலை கி.மீ.27/6–இல் பாலம் கட்டப்படும்.

பாலவிதி – கடவூர் – அய்யலூர் சாலையில் கி.மீ.8/6–லும் மற்றும் கி.மீ.12/6–லும் பாலங்கள் கட்டப்படும்.

இனங்கூர் நல்லூர் சாலை கி.மீ.5/10–இல் பாலம் கட்டப்படும்.

**காவிரி ஆற்றின் குறுக்கே புகளூர் அருகில் தடுப்பணை**

கரூர் மாவட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், புகளூர் பகுதியில் காவிரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட மீண்டும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) ரூபாய் 3 கோடி வழங்கும்.

❖ ❖ ❖

# தருமபுரி மாவட்டத்திற்கு பாலங்கள், மேம்பாலங்கள் மற்றும் கால்வாய்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.10.2017 அன்று தருமபுரியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**எண்ணேகொல் அணைக்கட்டில் இருந்து 36 ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு செல்ல புதிய கால்வாய் அமைத்தல்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏற்கெனவே அறிவித்துள்ளபடி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள எண்ணேகொல் அணைக்கட்டில் இருந்து ஒரு வழங்கு கால்வாய் அமைத்து தருமபுரி மாவட்டத்தில் உள்ள கேத்தனஹள்ளி ஏரி, முதலிபட்டி ஏரி, பொம்மனஹள்ளி ஏரி மற்றும் முக்குளம் ஏரி உட்பட 10 ஏரிகள் மற்றும் தும்பலஹள்ளி அணைக்கு நீர் வழங்க வழிவகை செய்யப்படும். இதன் மூலம், 1,103 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

**தருமபுரி மாவட்டம், தூள்செட்டி ஏரிக்கு தண்ணீர் எடுத்துச்செல்ல புதிய கால்வாய்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏற்கெனவே அறிவித்துள்ளபடி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அலியாளம் அணைக்கட்டிலிருந்து தருமபுரி மாவட்டம், தூள்செட்டி ஏரிக்கு நீர் வழங்குவதற்கு ஒரு புதிய பிரதான வழங்கு கால்வாய் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் 495 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

**ஜெர்தலாவ் கால்வாயிலிருந்து 14 ஏரிகள் பயன்பெறும் வகையில் ஒரு புதிய கால்வாய் அமைத்தல்**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், அஞ்சப்பள்ளி சின்னாறு அணையிலிருந்து வெளியேறும் உபரி நீர் தற்பொழுது ஜெர்தலாவ் கால்வாய் மூலம் வெளியேற்றப்பட்டு, பாசன வசதி செய்து தரப்படுகிறது. இந்த ஜெர்தலாவ் கால்வாயின் நெடுகை 5 ஆயிரம் மீட்டரிலிருந்து ஒரு புதிய வழங்கு கால்வாய் அமைப்பதன் மூலம் அதன் கீழுள்ள 14 ஏரிகளுக்கு நீர் வழங்கிட விரிவான ஆய்வு நடைபெற்று வருகிறது. ஆய்வின் முடிவின்படி மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

**நாகசமுத்திரம் கால்வாய் திட்டம்**

★ கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் வலதுபுறக் கால்வாய் நீட்டிப்பு திட்டமான திண்டல் ஏரி உபரி நீர் கிரியானஹள்ளி அருகே நாகசமுத்திரம் அணைக்கட்டை அடைகிறது. இதிலிருந்து ஒரு புதிய கால்வாய் அமைத்து மொரப்பூர் பகுதியில் உள்ள 30 ஏரிகளுக்கு நீர் வழங்கும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

★ தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம், பாளையம்புதூர் கிராமம், மாரியம்மன் கோவில் பள்ளம் அணைக்கட்டை புனரமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

**தருமபுரி நகருக்கு புதிய பேருந்து நிலையம்**

★ தருமபுரி நகராட்சியில் தற்பொழுது இரண்டு பேருந்து நிலையங்கள் அருகருகே அமைந்துள்ளன. இப்பேருந்து நிலையத்துக்கு நாளொன்றுக்கு 532 பேருந்துகள் வந்து செல்கின்றன. பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் பேருந்துகளின் போக்குவரத்தால் ஏற்படும் இட நெருக்கடியை சமாளிக்க ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டியுள்ளது. தருமபுரி நகருக்கு அருகில் ஏ.ரெட்டிஹள்ளி கிராமம் சோகத்தூர் பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதியில் 9 ஏக்கர் நிலத்தினை தானமாக வழங்கிட மேற்படி பகுதி மக்கள் முன்வந்துள்ளனர். மேற்படி 9 ஏக்கர் நிலத்தினை நகராட்சி ஏற்றுக் கொண்டு, அந்த இடத்தில் ஒரு புதிய பேருந்து நிலையம் தனியார் மற்றும் நகராட்சி பங்களிப்புடன் (PPP) படிப்படியாக செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

★ தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, மாரண்டஅள்ளி, மகேந்திரமங்கலம், பஞ்சப்பள்ளி மற்றும் காரிமங்கலம் ஆகிய காவல் நிலையங்களை உள்ளடக்கி, பாலக்கோட்டினைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய காவல் உட்கோட்டம் தோற்றுவித்து காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்கப்படும்.

★ தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு "பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம்" எனப் பெயர் சூட்டப்படும்.

★ தருமபுரி மாவட்டத்தில் புதிதாகத் துவக்கப்பட்டுள்ள பாலக்கோடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு "பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி" எனப் பெயர் சூட்டப்படும்.

★ தருமபுரி மாவட்டத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட நல்லம்பள்ளி வட்டத்தில் தற்போது இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு வட்ட மருத்துவமனையாகவும்,

★ காரிமங்கலம் வட்டத்தில் தற்போது இயங்கி வரும் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அரசு வட்ட மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படும்.

**தேர்வு நிலை நகராட்சியாக உள்ள தருமபுரி நகராட்சி, சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படும்.**

★ தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் இயங்கி வரும் தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை நிருவாகத்தின் கீழ் நடைபெற்று வரும் பலவகை தொழில்நுட்ப கல்லூரியை அரசே ஏற்று நடத்தும். இது அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரியாக மாற்றப்படும்.

★ தற்பொழுது தருமபுரி மாவட்டத்தில் தருமபுரியை தலைமையிடமாகக் கொண்டுள்ள கல்வி மாவட்டத்தில் 287 அரசு பள்ளிகள் நிருவகிக்கப்பட்டு வருகிறது. நிருவாக நலன் கருதி ஒரு புதிய கல்வி மாவட்டம் அமைக்கப்படும்.

★ பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பஞ்சப்பள்ளியிலிருந்து தருமபுரி மாவட்ட எல்லை வரை செல்லும் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 3 கி.மீ. நீளமுடைய சாலையை பொதுமக்களின் போக்குவரத்து வசதி கருதி நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்யப்படும்.

**தருமபுரி மாவட்டத்திற்கு பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள்**

★ சிவாடி மற்றும் தருமபுரி இரயில் நிலையங்களுக்கு இடையில், இரயில்வே கடவு எண்.38க்கு பதிலாக ஒரு புதிய சாலை மேம்பாலம் விரைவில் அமைக்கப்படும்.

★ சிவாடி மற்றும் தருமபுரி ரயில் நிலையங்களுக்கு இடையில் கடவு எண்.41க்கு பதிலாக ஒரு புதிய சாலை மேம்பாலம். சித்தேரி சாலையில் கி.மீ.1/2ல் ஒரு சிறு பாலம்.

★ பில்பருத்தி–குருபரஅள்ளி சாலையில் கி.மீ.12/4இல் ஒரு சிறுபாலம்.

★ அனுமன்தீர்த்தம்–பொய்யப்பட்டி சாலையில் கி.மீ.4/6இல் ஒரு உயர்மட்டப் பாலம்.

★ நவலை–பெரமாண்டப்பட்டி சாலையில் கி.மீ.4/6ல் ஒரு உயர்மட்டப் பாலம்.

★ பொம்மிடி ஆர்.எஸ். – தொப்பையாறு அணை சாலையில் கி.மீ.0/4இல் ஏற்கெனவே உள்ள குழாய் தரைப்பாலத்திற்கு பதிலாக ஒரு புதிய பாலம்.

★ மல்லசமுத்திரம்–அனுமந்தபுரம் சாலை கி.மீ.2/10இல் ஒரு பாலம்.

**அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் இடம் வழங்குதல்.**

தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரில் அமைந்துள்ள அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தற்போது இரு வேறு இடங்களில் இயங்கி வருகிறது. மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகம் மற்றும் விளையாட்டு மைதானம் அமைக்க வனத்துறைக்கு சொந்தமான இடத்தை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**கல்லூரி கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம்**

தருமபுரி மாவட்டத்தில் தற்போது அரசு கலைக் கல்லூரி கட்டிடத்தில் இயங்கிவரும் கல்லூரி கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு, அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டிடம் ஒரு கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

❖ ❖ ❖

# பொன்னமராவதி – இலுப்பூர் நகராட்சிகளாகத் தரம் உயர்த்த பரிசீலனை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.10.2017 அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**திருவெப்பூரில் சாலை மேம்பாலம்**

முசிறி – குளித்தலை – சேதுபாவசத்திரம் சாலையில் இரயில்வே கடவு எண் 376க்கு பதிலாக வெள்ளனூர் மற்றும் புதுக்கோட்டை இரயில் நிலையங்களுக்கு இடையில் திருவெப்பூரில் சாலை மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். இப்பணியை இரயில்வே துறையின் பங்களிப்புடன் செயல்படுத்த மத்திய அரசின் அனுமதி விரைவில் கோரப்படும்.

**கருவேப்பிலான் பகுதியில் சாலை மேம்பாலம்**

திருச்சி – புதுக்கோட்டை – இராமநாதபுரம் சாலையில் இரயில்வே கடவு எண் 372க்கு பதிலாக வெள்ளனூர் மற்றும் புதுக்கோட்டை இரயில் நிலையங்களுக்கு இடையில் கருவேப்பிலான் பகுதியில் சாலை மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். இப்பணியை இரயில்வே துறையின் பங்களிப்புடன் செயல்படுத்த மத்திய அரசின் அனுமதி விரைவில் கோரப்படும்.

**புதிய நகராட்சிகள்**

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி மற்றும் இலுப்பூர் பேரூராட்சிகளை விதிமுறைகளுக்கு உட்பட்டு, நகராட்சிகளாக தரம் உயர்த்திட பரிசீலனை செய்யப்படும்.

**புதுக்கோட்டையில் உள்ள அரசு கலை கல்லூரிகளுக்கு புதிய வகுப்பறைகள்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை நகரில் இயங்கிவரும் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் தற்போது படிக்கும் மாணவிகள் வசதிக்காக, புதியதாக 10 வகுப்பறை கட்டடங்களும் ஒரு ஆய்வுக்கூடமும் கட்டித் தரப்படும். மேலும், மாமன்னர் கலைக்கல்லூரிக்கு 16 வகுப்பறைகள் மற்றும் 3 ஆய்வுக் கூடங்களும், அரசு கல்வியியல் கல்லூரிக்கு 5 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வுக் கூடங்களும் இந்த ஆண்டே கட்டித் தரப்படும்.

**விராலிமலை அருள்மிகு ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ஒரு புதிய மலைப்பாதை அமைத்துத் தரப்படும்.**

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் உள்ள அருள்மிகு ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு புண்ணியத் தலமாகும். பொதுமக்களும் ஆன்மிக அன்பர்களும் சுவாமியைத் தரிசனம் செய்ய கோயில் படிகளையே பயன்படுத்த வேண்டியுள்ளது. வயதானவர்களுக்கும் சிறுவர்களுக்கும் படியேறிச் சென்று சுவாமியைத் தரிசனம் செய்வது மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே, மக்கள் நலன் கருதி வாகனங்களில் எளிதாக இந்தத் திருக்கோயிலுக்குச் செல்ல ஒரு புதிய மலைப்பாதை அமைத்துத் தரப்படும்.

**புதிய துணைக்கோள் நகரம்**

புதுக்கோட்டை மாவட்டம் முள்ளூர் ஊராட்சிப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஒரு புதிய துணைக்கோள் நகரம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய நடவடிக்கை எடுக்கப்படும்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கீழ்க்கண்ட புதிய பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் அமைக்கப்படும்**

★ வனியம்பட்டி – மணியம்பள்ளம் சாலையில் ஒரு புதிய உயர்மட்ட பாலம்

★ திருநல்லூர் – விராலிமலை சாலையில் ஒரு புதிய உயர்மட்ட பாலம்

★ தேசிய நெடுஞ்சாலை 210–லிருந்து மாத்தூர் சாலையில் ஒரு புதிய பாலம்

★ வைத்தூர் சாலையில் ஒரு புதிய பாலம்

★ பெருமநாடு – கோனையூர் சாலையிலிருந்து அத்தங்காடு – திருநாட்டம்பட்டி செல்லும் சாலையில் ஒரு புதிய பாலம்

★ ஆவுடையார்கோவில் – ஒக்கூர் சாலையில் 2 புதிய பாலங்கள் கட்டப்படும்.

★ முத்துவலக்குடி – பட்டமுடையான் சாலையில் ஒரு புதிய பாலம்

★ ஆவுடையார்கோவில் – கோட்டைப்பட்டினம் சாலை முதல் உடையார் கோயில் செல்லும் சாலையில் ஒரு புதிய பாலம்

★ திருக்காட்டுப்பள்ளி – செங்கிப்பட்டி சாலையில் ஒரு புதிய பாலம்

★ வல்லாத்திரக்கோட்டை – வண்டார்கோட்டை சாலையில் ஒரு புதிய பாலம்

★ கீழநிலைக்கோட்டை – உசிலம்பட்டி சாலையில் ஒரு புதிய பாலம்

★ பொன்னமராவதி – உலகம்பட்டி சாலை முதல் முருகப்பட்டி செல்லும் சாலையில் ஒரு புதிய பாலம் கோட்டைக்காடு சாலையில் ஒரு புதிய பாலம்

★ நிலையூர் – ஏரிபுரக்கரை சாலையில் ஒரு புதிய பாலம் ஆகியவை கட்டப்படும்.

❖ ❖ ❖

## தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களின் காப்பீட்டுத்தொகை ரூ.1 இலட்சமாக உயர்வு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.10.2017 அன்று விருதுநகரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**சிவகாசி நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்துதல்**

சிவகாசி நகராட்சி 2013 ஆம் ஆண்டு முதல் சிறப்பு நிலை நகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. இந்த நகராட்சியோடு திருத்தங்கல் நகராட்சி மற்றும் சித்துராஜபுரம், விஸ்வநத்தம், நாரணாபுரம், பள்ளப்பட்டி, அனுப்பன்குளம், தேவர்குளம், ஆனையூர், செங்கமலநாச்சியார்புரம், சாமிநத்தம் ஆகிய ஒன்பது ஊராட்சிகளையும் இணைத்து மாநகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

**சிவகாசி நகரத்திற்கு புறவழிச்சாலை**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகரத்திற்கு 33.48 கி.மீ. நீளத்திற்கு சுற்றுச்சாலை அமைக்கப்படும். இதற்கான நில எடுப்புப் பணிகள் 82 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகள் முடிக்கப்பட்டு புறவழிச்சாலை அமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

**இரயில்வே மேம்பாலம் அமைத்தல்**

★ சிவகாசி நகரத்திற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் பார்த்திபனூர் சாலை கி.மீ. 23/6–இல் கடவு எண் 424 – க்குப் பதிலாக சிவகாசி மற்றும் திருத்தங்கல் இரயில் நிலையங்களுக்கு இடையில் புதிய இரயில்வே மேம்பாலம் கட்ட, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

★ சிவகாசி நகரத்திற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் – சிவகாசி – பார்த்திபனூர் சாலை கி.மீ. 18/4–இல் கடவு எண் 427 – க்குப் பதிலாக ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சிவகாசி இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம் கட்ட, விரிவான திட்ட அறிக்கை

தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கையின் அடிப்படையில் ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

★ இராஜபாளையம் இரயில்வே நிலையத்திற்கு அருகில் இராஜபாளையம் – வெம்பக்கோட்டை சாலையில் இரயில்வே கடவு எண் 449–க்குப் பதிலாக ஒரு புதிய ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

★ சாத்தூர் நகரத்தில், சாத்தூர் – இருக்கன்குடி – நென்மேனி சாலையில் உள்ள இரயில்வே கடவு எண் 424–க்குப் பதிலாக ஒரு புதிய இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

**அருப்புக்கோட்டை நகராட்சிக்குப் புறவழிச்சாலை**

விருதுநகர் மாவட்டம் தேசிய நெடுஞ்சாலை 45B–யிலிருந்து அருப்புக்கோட்டை நகருக்கு மேற்கு புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், 35 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் அருப்புக்கோட்டை நகராட்சிக்கு புறவழிச்சாலை அமைக்கப்படும்.

**விருதுநகர் மாவட்டத்திற்கான புதிய பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள்**

★ சித்துராஜபுரம் – விளாம்பட்டி சாலை கி.மீ.2/4–இல் ஒரு பாலம்

★ ஆமத்தூர் – இலட்சுமியாபுரம் சாலை கி.மீ. 13/6–இல் ஒரு பாலம்

★ வத்றாப் – மகாராஜபுரம் சாலை முதல் தாணிப்பாறை சாலை வரை கி.மீ.2/6–இல் ஒரு சிறு பாலம்

★ இ.டி. ரெட்டியபட்டி – சித்துராஜபுரம் சாலை கி.மீ. 3/6–இல் ஒரு சிறு பாலம்

★ ஆமத்தூரிலிருந்து அழகாபுரி – விருதுநகர் சந்திக்கும் சாலையில் (வழி) மூளிப்பட்டி சாலை கி.மீ.2/6–இல் ஒரு சிறு பாலம்

★ அருப்புக்கோட்டை – குறுந்தமடம் சாலை கி.மீ. 10/4–இல் ஒரு பாலம்

★ மீனாட்சிபுரம் – ஏ.முக்குளம் சாலை கி.மீ.7/8–இல் ஒரு சிறு பாலம்

★ இராஜபாளையம் – அய்யனார் கோயில் சாலையிலிருந்து செண்பகத்தோப்பு சாலை கி.மீ.4/8–இல் ஒரு புதிய பாலம்

**வடபட்டியில் ஒரு புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம்**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வடபட்டி கிராமத்தில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படும்.

**அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக, தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு சுமார் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு திட்ட மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இவ்வாண்டில் இறுதி செய்யப்பட்டு, அதனடிப்படையில் வருகின்ற நிதியாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**சிவகாசி மற்றும் திருத்தங்கலில் காவல் நிலையக் கட்டடங்கள்**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகர காவல் நிலையம் மற்றும் திருத்தங்கல் காவல் நிலையம் ஆகியவை தற்பொழுது பழுதடைந்த நிலையில் இருப்பதைக் கருத்தில் கொண்டு, காவலர்கள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக புதிய காவல் நிலையக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

**வத்திராயிருப்பைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் வட்டம்**

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் தற்பொழுது 6 குறுவட்டங்கள், 49 வருவாய் கிராமங்களைக் கொண்டுள்ளது. வத்திராயிருப்புப் பகுதியில் உள்ள மக்களுக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது சிரமமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, வத்திராயிருப்பைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் வட்டம் உருவாக்க பரிசீலனை செய்யப்படும்.

**பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை உயர்த்தி வழங்குதல்**

தமிழ்நாட்டில் 1,185 பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் மிக ஆபத்தான வெடிபொருட்களை கையாண்டு வருவதால், அவ்வப்போது ஏற்படும் விபத்துகளில் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இவ்வாறு உயிரிழப்பவர்களின் குடும்பத்திற்கு பொருளாதார ரீதியாக பாதுகாப்பு அளிக்கும் விதமாக, தற்போது பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களுக்கு அந்தந்த

நிருவாகத்தினரால் தனி நபர் ஒருவருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் என்ற காப்பீட்டுத் தொகைக்கு குழு காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த காப்பீட்டுத் தொகை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். இந்த உயர்வு 01.09.2018 முதல் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 1.2 இலட்சம் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

**விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் வசதிகள்**

★ விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு புதிய எம்.ஆர்.ஐ கருவி, மூப்பியல் பிரிவு, சிறுநீரகப் பிரிவு, புற்றுநோய் சிகிச்சை பிரிவு, மருந்து கிடங்கு கட்டிட விரிவாக்கம், நுரையீரல் நோய்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை வசதி, கட்டணமில்லா நோய் குறியியல் பரிசோதனை வசதி, ஆய்வக கருவி, எக்கோ கார்டியோகிராம், டயாலிசிஸ் ஆகியன 9 கோடி ரூபாய் மதிப்பில் ஏற்படுத்தப்படும்.

★ மேலும், டிப்ளோமேட் ஆப் நேஷனல் போர்டு (Diplomate of National Board) மருத்துவ பட்ட மேற்படிப்பு தொடங்கப்படும்.

★ இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு விபத்துக் காய சிகிச்சை மையம், சி.டி ஸ்கேன், அறுவை அரங்கம் மற்றும் டயாலிசிஸ் பிரிவுகளும், அருப்புக் கோட்டை, சிவகாசி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைகளுக்கு தலா ஒரு டயாலிசிஸ் பிரிவும், பந்தல்குடி அரசு மருத்துவமனைக்கு நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையமும், சாத்தூர் மற்றும் நரிக்குடி அரசு மருத்துவமனைகளில் விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகளும் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

❖ ❖ ❖

# கொட்டாம்பட்டி கிராமத்தில் ஒருங்கிணைந்த புதிய பேருந்து நிலையம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 26.10.2017 அன்று திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பிற்கிணங்க திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கொட்டப்பட்டு கிராமத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க கலந்தாலோசகர் (Consultant) மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையினை தற்போது தொழில் நுட்ப மற்றும் நிதி மதிப்பீடு கூர்ந்தாய்வு செய்து உரிய வணிக முறையை (Business Model) முடிவு செய்து செயல்படுத்தப்படும்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம் கட்டப்படவிருக்கும் பாலங்கள்**

- ★ திருச்சி–சிதம்பரம் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் கல்லக்குடி – தாப்பாய் சாலையிலுள்ள காட்டாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டப்படும்.
- ★ ஏரகுடி–மகாதேவி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும். துலுக்கம்பட்டி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- ★ தண்டலை–திருத்தலையூர் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- ★ சமயபுரம் – கீழக்கண்ணுகுளம் (வழி) மண்ணச்சநல்லூர் – திருப்பஞ்சிலி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- ★ துவரங்குறிச்சி–அடைக்கம்பட்டி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- ★ இலுப்பூர்–வளநாடு சாலையில் ஒரு பாலம்
- ★ புடலாத்தி–மாராடி–கோட்டப்பாளையம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.

- ★ கொப்பம்பட்டி – விஸ்வாம்பாள் சமுத்திரம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- ★ பைத்தம்பாறை–சேருகுடி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.
- ★ வாளவந்தி–துலையாநத்தம் (வழி) மங்களம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.

**காட்டூர்–இலால்குடி இரயில் நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம்**

சென்னை–திருச்சிராப்பள்ளி வழித்தடத்தில் காட்டூர் மற்றும் இலால்குடி இரயில் நிலையங்களுக்கிடையே தற்போதுள்ள இரயில்வே கடவு எண்.226க்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்டப்படும்.

**திருவெறும்பூர் இரயில் நிலையம் அருகில் சாலை மேம்பாலம்**

திருச்சிராப்பள்ளி – கீழ்கல்கண்டார்கோட்டை சாலையில், மஞ்சத்திடல்–திருவெறும்பூர் இரயில் நிலையங்களுக்கிடையே உள்ள கடவு எண்.323க்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்டப்படும்.

**ஸ்ரீரங்கம் – திருச்சி டவுன் இரயில் நிலையங்களுக்கிடையே சாலை மேம்பாலம்**

காவேரி சாலையிலுள்ள இரயில்வே கடவு எண்.249க்கு பதிலாக ஸ்ரீரங்கம் மற்றும் திருச்சி டவுன் இரயில் நிலையங்களுக்கிடையே சாலை மேம்பாலம் கட்டப்படும்.

**துறையூருக்கு புறவழிச்சாலை**

துறையூர் நகரத்திற்கு இரண்டாம் கட்ட புறவழிச்சாலை அமைக்கப்படும்.

**திருச்சி–நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்துதல்**

திருச்சி முதல் நாமக்கல் வரை 77 கிலோ மீட்டர் நீளமுள்ள (மாநில நெடுஞ்சாலை எண்.25) சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த கொள்கை அளவில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் 12.05.2017இல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இச்சாலையினை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்த தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின் மீது தேசிய நெடுஞ்சாலை அலகு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மணப்பாறை தொகுதி, கோவில்பட்டியில் உள்ள பயணியர் விடுதியை புதுப்பித்தல்**

மணப்பாறை தொகுதி, கோவில்பட்டியில் உள்ள பழமை வாய்ந்த பயணியர் விடுதி பழுது நீக்கி புதுப்பிக்கப்படும்.

**மக்கள் நல்வாழ்வுத்துறை முலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்**

★ கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் லால்குடி, முசிறி, மணப்பாறை, ஸ்ரீரங்கம் மற்றும் துறையூர் மருத்துவமனைகளில் மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதலுதவி அளிக்க ஏதுவாக மாரடைப்பு சிகிச்சை பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

★ கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருந்து எதிர் வீரிய காச நோய் வார்டு ஏற்படுத்தப்படும்.

★ திருச்சிராப்பள்ளி நகரில் ஒரு புதிய மருந்து கிடங்கு அமைக்கப்படும்.

★ மணப்பாறை அரசு மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன், ஆய்வக கருவிகள், டயாலிசிஸ் கருவி, எண்டோஸ்கோப் கருவி, புற்றுநோயாளி கீமோதெரபி போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

★ மணப்பாறை வட்டத்தில் ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார சேவை திட்டம் செயல்படுத்தப்படும்.

★ இனாம்குளத்தூர் வட்டத்தில் கண் சிகிச்சை பிரிவு அமைக்கப்படும்.

★ நாவல்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

❖ ❖ ❖

## போடிநாயக்கனூர், உத்தமபாளையம், ஆண்டிப்பட்டி மற்றும் பெரியகுளம் ஆகிய வட்டத்தில் 11 தடுப்பணைகள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.11.2017 அன்று தேனியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**தடுப்பணைகள் அமைத்தல் (11 தடுப்பணைகள்)**

★ போடிநாயக்கனூர் வட்டம், பூதிபுரம் கிராமம், வலையாற்றின் குறுக்கே மாமரத்து வயல் அருகிலும், நாட்டாமைதோப்பு அருகிலும் இரண்டு தடுப்பணைகள் அமைக்கப்படும்.

★ உத்தமபாளையம் வட்டம், தேவாரம் கிராமத்தில் பிள்ளையார் ஊத்து ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கப்படும்

★ ஆண்டிபட்டி வட்டம், கடமலைகுண்டு கிராமத்தின் அருகே வைகை ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ ஆண்டிபட்டி வட்டம், வள்ளல்நதி கிராமத்தின் அருகே வைகை ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ ஆண்டிபட்டி வட்டம், எஸ்.எஸ்.புரம் கிராமத்தில் நாகலார் ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ போடிநாயக்கனூர் வட்டம், மதுரை வீரன் கோவில் அருகே அணைக்கரைபட்டி கிராமத்தில் கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ போடிநாயக்கனூர் வட்டம், போடி கிராமத்தில் புல எண்.683/2 அருகே கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ போடிநாயக்கனூர் வட்டம், போடி கிராமத்தில் புல எண்.1218 அருகே சின்னாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ போடிநாயக்கனூர் வட்டம், மாணிக்கபுரம் அருகே சுத்த கங்கை ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி கிராமத்தில் விநாயகர் கோவில் அருகே மஞ்சளாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.

**கால்வாய் நவீனப்படுத்துதல்**

பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள புது அணைக்கட்டு கால்வாய் தூர் வாரப்பட்டு, மதகுகளைப் புதியதாகக் கட்டி, மஞ்சளாற்றில் வரும் தண்ணீர் எவ்வித தடையுமின்றி மத்துவார்குளம் கண்மாயை சென்று அடையும் வகையில் சிமெண்ட் வாய்க்காலாக மாற்றப்படும். இத்திட்டத்தின் மூலம் 474 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி உறுதி செய்யப்படும்.

**கண்மாயினை ஆழப்படுத்துதல்**

தேனி வட்டத்தின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அல்லிநகரம் – மீறுசமுத்திரம் கண்மாயை ஆழப்படுத்தி அதன் கொள்ளளவு உயர்த்தப்படும்.

**சாலைகள் வலுப்படுத்துதல்.**

★ தேசிய நெடுஞ்சாலை 49–இல் கி.மீ.50/6–58/0 அதாவது ஆண்டிபட்டி கணவாய் முதல் தி.சுப்புலாபுரம் வரை உள்ள சாலை வலுப்படுத்தப்படும்.

★ தேசிய நெடுஞ்சாலை 49–இல் கி.மீ.74/0–76/450 மற்றும் 77/6–80/0 அதாவது தேனி நகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பகுதியிலிருந்து போடிவிலக்கு வரை உள்ள சாலை வலுப்படுத்தப்படும்.

**பாலங்கள் அமைத்தல்**

★ ஆண்டிபட்டி – மயிலாடும் பாறை – தங்கம்மாள்புரம் சாலை வழி வாய்கால் பாறை மூலக்கடை சாலையில் கிமீ. 7 / 2 மற்றும் கிமீ. 1 / 10 ஆகிய இடங்களில் இரண்டு உயர்மட்டப் பாலங்கள் கட்டப்படும்.

★ போடி – தேவாரம் – லட்சுமி நாயக்கன்பட்டி வழியாகச் செல்லும் திம்மிநாயக்கன்பட்டி சாலையில் கி.மீ. 4 / 6 (i) மற்றும் 4 / 6 (ii) ஆகிய இடங்களில் இரண்டு சிறுபாலங்கள் கட்டப்படும்.

**மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல்**

★ தேனி மாவட்டம், பெரிய குளம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் JICA நிதி உதவியுடன் அதிநவீன உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் டயாலிசிஸ், எண்டோஸ்கோப், மன நல சிறப்பு பிரிவு உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

★ தேனி மாவட்டத்தில் உள்ள மருந்து கிடங்கு விரிவாக்கம் செய்யப்படும்.

★ தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேமோகிராம் அமைக்கப்படும்; மூப்பியல் பிரிவு ஏற்படுத்தப்படும்.

★ தேனி மாவட்டத்தில் பணியாற்றும் 162 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு மருத்துவ புள்ளி விவரங்களைப் பதிவு செய்திட கையடக்கக் கணினிகள் (**Tablets**) வழங்கப்படும்.

★ கம்பம் அரசு மருத்துவமனையில் டயாலிசிஸ் உள்ளிட்ட நவீன ஆய்வகக் கருவிகள் வழங்கப்படும்.

★ வீரபாண்டி அரசு மருத்துவமனையில் நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

★ வீரபாண்டி கிராம சுகாதார செவிலியர் பயிற்சி பள்ளி மேம்படுத்தப்படும்.

★ மயிலாடும்பாறை மற்றும் கடமலைக்குன்று வட்டாரங்களில் விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.

❖ ❖ ❖

## "அனைவருக்கும் வீடு" வழங்கும் திட்டத்தின் கீழ் 240 அடுக்குமாடி குடியிருப்புகள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 12.11.2017 அன்று திருநெல்வேலியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

- திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படும்.
- "அனைவருக்கும் வீடு" வசதி திட்டத்தின் கீழ் ஏழை எளிய மக்களுக்கு திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் நகர், வாகைக்குளம் திட்டப் பகுதியில் 240 அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டப்படும்.
- கீழப்பாவூர் ஒன்றியம், பெத்தநாடார்–பட்டியில் அரசு கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.
- ராணி அண்ணா கல்லூரி மாணவிகள் கல்லூரிக்குச் சென்று வர ஏதுவாக, கீழப்பாவூரிலிருந்து ஆலங்குளம் வழியாக திருநெல்வேலி செல்ல பேருந்து வசதி செய்து கொடுக்கப்படும்.
- மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட இராமநதி, ஜம்பு நதி மேல்மட்டக் கால்வாய் திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டப் பணிகளுக்கு விரைவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- 4,943 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன உறுதி பெறும் பொருட்டு, கடையம் ஒன்றியம், இராம நதி அணை தூர்வாரப்படும்.
- நம்பியாற்றின் குறுக்கே கண்ண–நல்லூர் பகுதியில் ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கல்லிடைக்–குறிச்சி கிராமத்தில் எலுமிச்சை ஆற்றின் குறுக்கே படுகை அணை கட்டப்படும்.
- திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், அகரம் கிராமத்தில் சிற்றாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும்.

- திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை கிராமத்தில் அனுமா–நதி சிற்றாற்றில் கலக்கும் இடத்திற்கு மேற்புறம் தடுப்பணை கட்டப்படும்.
- திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை கிராமத்தில் அனுமா–நதியில் அருந்தவ–பிராட்டி அணைக்கட்டிற்கு கீழ்புறம் தடுப்பணை கட்டப்படும்.
- திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், சிந்தாமணி கிராமத்தில் கோட்டமலை–யாற்றின் அச்சந்திகுளம் பிரியும் இடத்தில் படுகை அணை கட்டப்படும்.
- திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமத்தில் நிசப–நதியின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும்.
- திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அதிநவீன உபகரணங்கள், சி.ஆர்ம் கருவி, தாய்சேய் நலப்பிரிவிற்கு நவீன கருவிகள் மற்றும் மாரடைப்பு சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும்.
- கண்டிகைப்–பேரி மருத்துவமனையில் அதிநவீன உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, அம்பாசமுத்திரம், கோவில்பட்டி, செங்கோட்டை மருத்துவமனைகளில் மாரடைப்பு சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படும்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் புதியதாக ஒரு மருந்து கிடங்கு கட்டப்படும்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் பணியாற்றும் 379 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு மருத்துவ புள்ளி விவரங்களை பதிவு செய்திட கையடக்க கணினிகள் (**Tablets**) வழங்கப்படும்.
- மேல–நீலித–நல்லூர் மற்றும் இராதாபுரம் வட்டாரங்களில் விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.
- சொக்கம்பட்டி மற்றும் வாசுதேவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 2 டயாலிசிஸ், எண்டோஸ்கோப் உள்ளிட்ட அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும். புற்றுநோயாளிகளுக்கான வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிச்சை மையம், கட்டணமில்லா கருத்தரிப்பு மையங்கள் உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஏற்படுத்தப்படும். மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, மாரடைப்பு சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

* சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன், டயாலிசிஸ் உள்ளிட்ட கருவிகள் மற்றும் தடுப்பூசி சேமிப்பு கிடங்கு அமைக்கப்படும். மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, மாரடைப்பு சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும்.
* ரெட்டியார்பட்டி அரசு மருத்துவமனையில் நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.
* கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு டயாலிசிஸ் கருவி வழங்கப்படும்.
* கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெத்தநாடார்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.
* பாளையங்கோட்டை ஒன்றியம், முத்தூர் ஊராட்சி, காமராஜ் நகர் பகுதியில் புதிய துணை சுகாதார நிலையம் அமைக்கப்படும்.
* திசையன்விளையில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் பன்னோக்கு சமுதாய நலக் கூடம் கட்டப்படும்.

**சாலை மேம்பாட்டுப் பணிகள்**

* தாழையூத்து முதல் டக்கரம்மாள்புரம் வரை மதுரை – கன்னியாகுமரி சாலையில் கி.மீ.142/0 – 146/2 மற்றும் கி.மீ.156/0 – 160/0 வரை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித் தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படும்.
* திருநெல்வேலி புறவழிச்சாலை கி.மீ.0/0 – 3/510 மற்றும் கி.மீ.3/920 – 7/6 வரை நான்கு வழிச் சாலையாக மத்திய தடுப்புடன் (குறுக்கு வடிகால் உட்பட) அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படும்.
* இடைகால் – சேர்ந்தமரம் சாலை கி.மீ.0/0–13/8 வரை உள்ள சாலை அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.
* சங்கரன்கோவில் – வாசுதேவநல்லூர் சாலை கி.மீ.0/0 – 18/120 வரை உள்ள சாலை அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.
* இராதாபுரம்–இடையன்குடி சாலை கி.மீ.0/0–17/0 வரை ஒருவழித்தடத்திலிருந்து இடைவழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படும்.
* சாம்பவர் வடகரை சாலை கி.மீ.0/0 – 8/6 வரை உள்ள சாலை அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.
* திருநெல்வேலி – செங்கோட்டை – கொல்லம் கி.மீ.5/0 முதல் 50/6 வரை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.

**இரயில்வே மேம்பாலங்கள்**

* மதுரை –கன்னியாகுமரி சாலை கி.மீ.153/10–இல் கடவு எண் 4–க்கு மாற்றாக இரயில்வே கி.மீ.4/8–9–இல் திருநெல்வேலி செய்–துங்க–நல்லூர் இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

* நாங்குநேரி – ஏர்வாடி – வள்ளியூர் – விஜயாபதி சாலை கி.மீ.14/6–9–இல் கடவு எண் 82 பி – க்குப் பதிலாக (இரயில்வே கி.மீ.322/9–இல் 323/0) நாங்குநேரி – வள்ளியூர் இரயில்வே நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

* காவல் கிணறு – இராதாபுரம் சாலை கி.மீ.0/6–இல் இரயில்வே கடவு எண் 74பி–க்குப் பதிலாக இரயில்வே கி.மீ.310/0 – 310/100 – இல் வடக்கு பணங்குடி மற்றும் ஆரல்வாய்மொழி இரயில்வே நிலையங்களுக்கு இடையே இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

**புறவழிச்சாலைகள்**

* அம்பாசமுத்திரம், தென்காசி மற்றும் சங்கரன்கோவிலில் புறவழிச்சாலைகள் அமைக்கப்படும்.

**உயர்மட்டப் பாலங்கள்**

* திருநெல்வேலி – மதுரை – கன்னியாகுமரி சாலை கி.மீ.150/2–இல் பழைய ஆற்றுப் பாலத்திற்கு இணையாக தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

* கரம்பை – பொட்டல் சாலை கி.மீ. 3/4 –இல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

* வாசுதேவநல்லூர் – பூலாங்குளம் சாலை கி.மீ.1/2 – இல் ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

* செண்பகபுரம் – மீனாட்சிபுரம் சாலையில் கி.மீ. 1/6–இல் ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

* கோதைச்சேரி சாலையில் கி.மீ.1/2–இல் ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

* ரெட்டியார்பட்டி – விஜய–நாராயணம் சாலை கி.மீ.9/8–இல் ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

* குற்றாலம் – மத்தளம்–பாறை சாலை கி.மீ.0/10–இல் ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

* திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, கோவிந்தபேரி கிராமத்தில் உள்ள மனோ கல்லூரியில் முதல் மாடியி கட்டட பராமரிப்புப் பணி மற்றும் சுற்றுச்சுவர் கட்டித்தரப்படும்.

* திருநெல்வேலி மாவட்டம், இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி மற்றும் சுரண்டை காமராசர் அரசு கலைக் கல்லூரி ஆகியவற்றிற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டித்தரப்படும்.

❖ ❖ ❖

# தைல மரம் நடவு செய்யும் விவசாயிகளுக்கான ஆதார விலை ரூ.4,000 ஆக உயர்வு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.11.2017 அன்று சிவகங்கையில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**பேருந்து நிலையம்**

★ திருப்பத்தூர் பேரூராட்சியில் பொதுமக்கள் வசதிக்காக புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

**தெப்பக்குளம் சீரமைப்பு**

★ காளையார்கோவில் மையப்பகுதியில் மக்களின் நீர் ஆதாரமாக அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தெப்பக்குளத்தின் சுற்றுச்சுவர், படித்துறை, நீர்வரத்துக் கால்வாய் மற்றும் சுற்றுப்பாதை சீரமைக்கப்படும்.

**அரசு கலைக் கல்லூரி கலையரங்கம்**

★ சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரி கலையரங்கம் மற்றும் சீரணி அரங்கம் புதுப்பிக்கப்படும். இந்தக் கல்லூரியைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்.

**புறவழிச்சாலை**

★ சிவகங்கை நகருக்கு 10.60 கி.மீ. நீளத்திற்கு புறவழிச்சாலை அமைக்கப்படும்.

**பாலங்கள்**

★ பெரம்பலூர் – மானாமதுரை சாலையிலிருந்து வேலூர் செல்லும் சாலையில் கி.மீ 4/2இல் ஒரு பாலம் கட்டப்படும்.

★ உருவட்டி – மேலவாய்க்கோட்டை சாலையில் கி.மீ 1 /2இல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

★ கப்பலூர் – ஏம்பல் சாலையில் கி.மீ 5 / 10இல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

★ சாந்தரசன்கோட்டை – சூரணம் சாலையில் கி.மீ 5/6இல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

- ★ மாத்தூர் – முலைக்குளம் சாலையில் கி.மீ. 1/4இல் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.
- ★ ஆண்டிச்சி ஊரணி – ஒட்டாணம் சாலையில் கி.மீ. 0 / 4இல் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.
- ★ மல்லாக்கோட்டை– நைனாபட்டி சாலையில் கி.மீ. 3/2இல் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.
- ★ திருப்பத்தூர் – ஆலங்குடி சாலையில் கி.மீ. 9 / 6–8இல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.
- ★ கண்ணங்குடி – கூக்குடி சாலை கி.மீ.2/8இல் விருசுழி ஆற்றின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

**மருத்துவ வசதிகள்**

- ★ சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சி. ஆர்ம். கருவி மற்றும் தாய்சேய் நலப்பிரிவிற்கு நவீன கருவிகள் வழங்கப்படும். இங்கு மூப்பியல் பிரிவு ஏற்படுத்தப்படும்.
- ★ சிவகங்கை மாவட்டத்தில் மருந்து கிடங்கு விரிவாக்கம் செய்யப்படும்.
- ★ சிவகங்கை மாவட்டத்தில் பணியாற்றும் 275 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு மருத்துவப் புள்ளி விபரங்களைப் பதிவு செய்திட கையடக்கக் கணினிகள் (**Tablets**) வழங்கப்படும்.
- ★ காரைக்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன், டயாலிசிஸ், எண்டோஸ்கோப் உள்ளிட்ட அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும். விபத்து காய சிகிச்சை மையம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**அணைக்கட்டுகள் கட்டுதல்**

- ★ காரைக்குடி வட்டம், குறுந்தம்பட்டு கிராமத்தில் உள்ள எஸ்.ஆர். பட்டிணம் கண்மாய் மற்றும் அதன் கீழ் உள்ள கண்மாய்களுக்குத் தண்ணீர் வழங்க மணிமுத்தாற்றின் குறுக்கே 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் அணைக்கட்டு கட்டப்படும்.

**தடுப்பணை கட்டுதல்**

- ★ சிங்கம்புணரி வட்டம், காளாப்பூர் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.

**படுகை அணை கட்டுதல்**

- ★ சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கானூர் கால்வாய் மற்றும் பழையனூர் கால்வாய் மூலம் பாசனம் பெறும் கண்மாய்களுக்காக வைகை

ஆற்றில் திருப்புவனம் அருகில் படுகை அணை கட்ட விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**ஆற்றினைச் சீரமைத்தல்**

★ சருகனி ஆற்றின் குறுக்கே உள்ள அணைக்கட்டு மற்றும் ஆறுகளில் உள்ள மணல் திட்டுகளை அகற்றி இரு கரைகளையும் பலப்படுத்திச் சீரமைக்கும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மின் வசதிகள்**

★ சிவகங்கை மாவட்டத்தில் கீழச்சீவல்பட்டியில் புதிய 33/11 கி.வோ. துணை மின்நிலையம் ரூ.4.43 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

★ சிவகங்கை மாவட்டம், தெக்கூர் 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் 16 எம்.வி.ஏ. திறனுடன் கூடிய புதிய மின்மாற்றி நிறுவப்படும்.

★ சிவகங்கை மாவட்டம், இடையமேலூரில் புதிய 110/22 கி.வோ. துணை மின் நிலையம் ரூபாய் 11.70 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

★ சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலுள்ள சாலை கிராமம் 110/22 கி.வோ துணை மின்நிலையத்தில் புதிய கட்டுப்பாட்டு அறை அமைக்கப்படும்.

★ சிவகங்கை மின்பகிர்மான வட்டத்தில் புதியதாக கணினி முறையில் மின்தடை பழுது நீக்கும் மையம் (**Fuse Off Call Centre**) ரூ.18.20 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

★ சிவகங்கை மாவட்டம், பொட்டப்பாளையம் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் கூடுதலாக 8 எம்.வி.ஏ. திறனுடன் கூடிய புதிய மின்மாற்றி நிறுவப்படும்.

**சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று**

★ இப்பகுதி உள்ள மானாவாரி நிலங்களில் வறட்சியைத் தாங்கி நன்கு வளர கூடிய, தைலம், சவுக்கு, மலைவேம்பு மற்றும் சூபாபுல் போன்ற கூழ் மரங்களை காகித உற்பத்திக்கு தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்துவருகிறது.

★ தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சென்ற ஆண்டு டன் ஒன்றுக்கு ரூ.2.700 வீதம் தைல கூழ்மரங்களை விவசாயிகளின் நிலத்தில் இருந்து அறுவடை செய்து கொள்முதல் செய்தது.

★ கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் வறட்சியை கருத்தில் கொண்டு, 01.12.2017 முதல் அறுவடை செய்யப்படும் தைல கூழ் மரங்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ.3,750 வீதம் விவசாயிகளுக்கு வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

★ மேலும், இந்த ஆண்டு முதல் தைல மரம் நடவு (சாகுபடி) செய்யும் விவசாயிகளுக்கு குறைந்த பட்ச ஆதார விலையாக விவசாய நிலங்களிலிருந்து அறுவடை செய்யப்படும் கூழ் மரங்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ.4,000ஆக நிர்ணயித்துள்ளது.

★ இவ்வாறு சாகுபடி செய்த தைல கூழ் மரங்களை ஐந்து வருடங்களுக்கு பின் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் போது, இந்த குறைந்த பட்ச ஆதார விலையான ரூ.4,000/–மோ, அல்லது அறுவடை செய்யும்போது உள்ள சந்தை விலையோ, இவ்விரண்டில் எது அதிகமோ அந்த விலைக்கே விவசாய நிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும்.

★ இத்திட்டம், மானாவாரி நிலங்கள் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு நிரந்திர வருவாய் ஈட்ட பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

❖ ❖ ❖

## திரு.சி.பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 22.11.2017 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

- ★ ஏரல்–ஐ தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் வட்டம் தோற்றுவிக்கப்படும்.
- ★ கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில், பெரியசாமிபுரம் மற்றும் அகிலாண்டபுரம் ஆகிய இடங்களில் புதிய கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கப்படும்.
- ★ அரசு மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் தூத்துக்குடி வ.உ.சி. சந்தையினை நவீனப்படுத்தி, வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன், புதிய வணிக வளாகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- ★ தூத்துக்குடி மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளான சங்கரப்பேரி, மீளவிட்டான், தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய பகுதிகளில் சாலைப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.
- ★ தூத்துக்குடி மாநகராட்சியின் அவசர மற்றும் அத்தியாவசிய பணிகளுக்காக உரிய பணியாளர்கள் படிப்படியாக நியமிக்கப்படுவார்கள்.
- ★ தூத்துக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு மற்றும் புதூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கும் ஏற்படுத்தப்படும்.
- ★ தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் திரு. சி.பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படும். இதற்கான பணி 2018–2019 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும்.
- ★ மணப்பாடு கடற்கரைப் பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணிகள், குடிநீர் வசதி, கழிவறை வசதிகள், வாகன நிறுத்துமிடம், கண்காணிப்பு கேமரா, வழிகாட்டிப்

பலகைகள், மீட்புப் படகுகள், கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் சாதனங்கள் வழங்கி அப்பகுதி சுற்றுலாத் தலமாக தரம் உயர்த்தப்படும்.

- ★ தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் இந்திய மருத்துவக் கழகம் உரிய அனுமதி வழங்கியதும், மருத்துவப் பட்ட மேற்படிப்புகள் துவக்கப்படும்.
- ★ விளாத்திகுளம் தாலுகா, சிவஞானபுரம் கிராமத்திலும், கயத்தார் ஊராட்சி ஒன்றியம், வானரமுட்டி கிராமத்திலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும்.
- ★ தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும். மூப்பியல் பிரிவு மற்றும் நுரையீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- ★ கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு டயாலிசிஸ் கருவிகள், எண்டோஸ்கோப் ஆய்வக உபகரணங்கள் வழங்கப்படும்.
- ★ ஏரல் அரசு மருத்துவமனையில் நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.
- ★ திருச்செந்தூர் சமுதாய சுகாதார மையத்தில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- ★ கருங்குளம் மற்றும் ஓட்டப்பிடாரம் வட்டாரங்களில் விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.
- ★ விளாத்திகுளம் வட்டம், பெரியசாமிபுரம் கிராமம் மற்றும் வேம்பார் கிராமத்தில் வேம்பாற்றின் குறுக்கே இரண்டு தடுப்பணைகள் கட்டப்படும்.
- ★ ஸ்ரீவைகுண்டம் வட்டம், அகரம் குடியிருப்பு அருகே வல்லநாடு கிராமத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- ★ சாத்தான்குளம் வட்டம், பள்ளக்குறிச்சி கிராமத்தில் கருமேனி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- ★ கோவில்பட்டி வட்டம், ஆவுடையம்மாள்புரம் கிராமத்தில் உப்போடையின் குறுக்கே ஒரு சிறிய தடுப்பணை கட்டப்படும்.
- ★ கோவில்பட்டி வட்டம், சிதம்பரம்பட்டி கிராமத்தில் உப்போடையின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- ★ கோவில்பட்டி வட்டம், சவலப்பேரி கிராமத்தில் உப்போடையின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ உடன்குடி, செட்டிக்குறிச்சி, அரசரி கிராமம் மற்றும் தூத்துக்குடி கடற்கரை சாலை ஆகிய 4 இடங்களில் புதிய துணை மின்நிலையம் அமைக்கப்படும்.

★ பொட்டலூரணி – சேக்காரக்குடி – பேரூரணி – மங்களகிரி சாலையில் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.

★ மீனாட்சிபுரம் – வெங்கடாச்சலபுரம் சாலையில் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.

★ கோவில்பட்டி – கடலையூர் – முத்தாலபுரம் – பெரிலோவன்பட்டி – பிள்ளையார்நத்தம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.

★ திசையன்விளை – உடன்குடி சாலையில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

★ கயத்தார் – கழுகுமலை சாலையில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

★ புதூர் – பரளச்சி சாலையில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

★ மீளவிட்டான் – தூத்துக்குடி இரயில்வே நிலையங்களுக்கு இடையே

★ இரயில்வே கடவு எண் 486இல் சாலை மேம்பாலம் மற்றும் 487இல் அளவான பயன்பாட்டு சுரங்கப்பாதை கட்டப்படும்.

★ தூத்துக்குடி – கொல்லம் சாலையில் கூடுதல் சாலை மேம்பாலம் கட்டப்படும். இப்பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

★ படர்ந்தபுளி அருகில் பாலப் பணி மேற்கொள்ளப்படும்.

★ கோவில்பட்டி – குமாரபுரம் – கோபாலபுரம் – செட்டிக்குறிச்சி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ கோவில்பட்டி இரயில்வே நிலையம் முதல் லெட்சுமி மில் மேம்பாலம் வரையிலான சாலையானது நான்கு வழித்தட சாலையாக அகலப்படுத்தப்படும்.

★ மணியாச்சி வழியாக வடக்கு நோக்கி செல்லும் 15–க்கும் மேற்பட்ட இரயில்களின் பயண வசதியைத் தூத்துக்குடி நகர மக்கள் பயன்படுத்திடும் வகையில் மீளவிட்டான் முதல் மணியாச்சி வரை இரயில் பாதையை ஒட்டி வாகனங்கள் செல்லும் வகையில் புதிய சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

❖ ❖ ❖

## இராமநாதபுரம் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்வு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 25.11.2017 அன்று இராமநாதபுரத்தில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

★ பட்டினம்–காத்தான், சக்கரகோட்டை, அச்சுதன்வயல் மற்றும் சூரன்கோட்டை ஆகிய ஊராட்சிகளை இணைத்து இராமநாதபுரம் நகராட்சியானது சிறப்பு நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தப்படும்.

★ R.S. மங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படும்.

★ மிளகாய் பயிருக்காக பரமக்குடி முதுகுளத்தூர் மற்றும் கமுதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் முறையே, அனைத்து வசதிகளுடன் கூடிய முதல்நிலை சுத்திகரிப்பு மையங்கள் அமைக்கப்படும்.

★ இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய வேளாண் சந்தைத் திட்டத்தின்கீழ் மிளகாய் மற்றும் பருத்தி வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில், பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், கணினி வசதிகள், தரம் பிரிக்கும் அறைகள் உள்ளிட்டவை ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் வேளாண் தொழில் நுட்ப உட்கட்டமைப்பு நிதி மற்றும் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்டு, பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

★ இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலத்தடி நீரில் உப்புத்தன்மை அதிகமாக உள்ள 50 இடங்களில் ரூ.7.75 கோடி செலவில் R.O பிளாண்ட்டுகள் – குடிநீர் சுத்திகரிப்பு அமைப்புகள் ஊரக வளர்ச்சித்துறை மூலம் அமைக்கப்படும்.

★ ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் கற்காத்தகுடி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும்.

★ இராமநாதபுரம் மாவட்டம், பட்டணம் காத்தான், உப்பூர், மற்றும் கீழக்கரை ஆகிய 3 இடங்களில் புதிய துணை மின்நிலையங்கள் அமைக்கப்படும்.

★ இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர், அபிராமம், கமுதி, கடலாடி, பரமக்குடி மற்றும் பெருங்குளம் ஆகிய 6 இடங்களில் உள்ள துணை மின்நிலையங்களில் புதிய மின்மாற்றிகள் நிறுவப்படும்.

★ மண்டபம் ஊராட்சி ஒன்றியம், வேதாளை ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

★ இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு மருத்துவ பட்ட மேற்படிப்பு படிக்கவும், மேலும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன், சி.டி. ஸ்கேன், டயாலிசிஸ், எக்கோ கார்டியோகிராம் உள்ளிட்ட மருத்துவக் கருவிகள் வாங்கவும், விபத்து காய சிகிச்சை மையம் மற்றும் மூப்பியல் பிரிவு அமைக்கப்படும்.

★ பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு நவீன மருத்துவக்கருவிகள், மற்றும் அறுவை அரங்கு அமைக்கப்படும்.

★ தேவிபட்டிணம் அரசு மருத்துவமனையில் நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

★ பார்த்திபனூர், கமுதி மற்றும் முதுகுளத்தூரில் புறவழிச்சாலைகள் அமைக்கப்படும்.

★ இராமநாதபுரம் – கீழக்கரை சாலையில் இராமநாதபுரம் – உச்சிபுளி இரயில்வே நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

★ புத்தேந்தல் – ஏர்வாடி சாலை ஒரு பாலம் கட்டப்படும்.

★ இராமநாதபுரம் – எமனேஸ்வரம் சாலை முதல் P. கொடிகுளம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.

★ முதுகுளத்தூர் – உத்தரகோசமங்கை சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.

★ நத்தம் – நெடியமாணிக்கம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.

★ கிழக்கு கடற்கரை சாலையான நாகூர் – நாகப்பட்டினம் – இராமநாதபுரம் – தூத்துக்குடி சாலையில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட 120 கி.மீ. நீளமுள்ள சாலையினை ஆக்கம் மற்றும் செயல்திறன் சார்ந்த சாலை ஒப்பந்தத் திட்டத்தின் (OPRC) கீழ் சாலை மேம்பாடு செய்ய பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 56 கி.மீ. நீளத்திற்கு ரூ.19.04 கோடி மதிப்பில் சாலை மேம்பாட்டு

பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 64 கி.மீ. நீளமுள்ள சாலையில் ரூ.21.76 கோடி மதிப்பில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

★ பரமக்குடி வட்டம், மேலப்பார்த்திபனூர் கிராமத்தில் பரளையாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டி கீழச்சிவன்குளம் கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு பாசன வசதி அளிக்கப்படும்.

★ கமுதி வட்டம், பெரிய–யானைக்குளம் கிராமத்தில் பரளையாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டி பெரியயானைக்குளம் கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு பாசன வசதி அளிக்கப்படும்.

★ திருவாடாணை வட்டம், கட்டியவயல் கிராமத்தில் விருசுழி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டி மல்லனூர் கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு பாசன வசதி அளிக்கப்படும்.

★ கமுதி வட்டம், காக்குடி கிராமம் அருகே குண்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கப்படும்.

★ கடலாடி வட்டம், சாயல்குடி கிராமம் அருகே குண்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கப்படும்.

❖ ❖ ❖

## "எம்.ஜி.ஆர். 100" என்ற புதிய இரக நெல் அறிமுகம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
29.11.2017 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த
சிறப்பு அறிவிப்புகள்

**நெல் இரகத்திற்கு பெயரிடுதல்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் இந்த ஆண்டு புதியதாக வெளியிடப்பட்ட நெல் இரகத்திற்கு "எம்.ஜி.ஆர் 100" என சற்று முன்னர் பெயரிட்டு, அந்த ரக நெல்லை பயனாளிக்கும் வழங்கினேன்.

**பள்ளியை தரம் உயர்த்துதல்**

கும்பகோணம் நகரத்தில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். படித்த யானை அடி நகராட்சி தொடக்கப் பள்ளியானது நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படும். மேலும் அப்பள்ளிக்கு பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுப் பள்ளி என்றும் பெயர் சூட்டப்படும். அப்பள்ளியில் சத்துணவு வழங்கப்படவில்லை என்பதை அறிந்தவுடன், மாண்புமிகு அம்மாவின் அரசு, சத்துணவு திட்டத்தின் பிதாமகன் புரட்சித்தலைவர் அவர்கள் படித்த பள்ளியில் உடனடியாக சத்துணவு மையம் தொடங்க ஆணையிட்டது. தற்பொழுது அந்த பள்ளியில் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இங்கேயே சத்துணவு சமைக்க தனி சமையலறை கட்டப்படும்.

**புதிய கால்நடை கிளை நிலையம்**

திருபணந்தாள் ஒன்றியத்தில் திட்டச்சேரி, திருவோணம் ஒன்றியத்தில் கிழமங்கலம் ஆகிய கிராமங்களில் இரண்டு புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும்.

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்**

★ கும்பகோணம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் விவசாயிகளின் நலன் கருதி 2.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கும், பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மற்றும் வல்லம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகங்களில் தலா 1.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுமாக ஐந்து கிடங்குகள் நபார்டு வங்கி உதவியுடன் ஏற்படுத்தப்படும்.

★ பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் மின்னணு ஏலமுறை மென்பொருள் வசதி, மின்னணு ஏலக்கொட்டகை, பொதுவான வகைப்படுத்தும் கருவிகள் மற்றும் எடைமேடை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும். (1.02 கோடி ரூபாய்)

**மின் வசதிகள்**

★ தஞ்சாவூர் மாவட்டம், பந்தநல்லூரில் மின் விநியோகத்தை மேம்படுத்தும் பொருட்டு, பந்தநல்லூரில் புதிய துணை மின் நிலையம் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

★ மின் நகரில் புதிய 110/11 கி.வோ. துணை மின்நிலையம் 5.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

★ திருமலை சமுத்திரத்தில் புதிய 110/33–11 கி.வோ. துணை மின்நிலையம் 10.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

★ 110/11 கி.வோ. பூண்டி துணை மின் நிலையம், 2.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 110/33–11 கி.வோ. துணை மின் நிலையமாக தரம் உயர்த்தப்படும்.

★ 110/11 கி.வோ. ஊரணிபுரம் துணை மின் நிலையம் 2.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 110/33–11 கி.வோ. துணை மின் நிலையமாக தரம் உயர்த்தப்படும்.

★ தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தில் புதியதாக கணினி முறையில் மின்தடை பழுது நீக்கும் மையம் (Fuse Off Call centre) 44.95 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

★ பட்டுக்கோட்டைக்குட்பட்ட பேராவூரணி உப கோட்ட அலுவலகம் 35 இலட்சம் ரூபாய் செலவில் பேராவூரணி கோட்ட அலுவலகமாக மாற்றி அமைக்கப்படும்.

**ரெகுலேட்டர் அமைத்தல்**

கும்பகோணம் வட்டம், கும்பகோணம் நகரத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே மைல் 57/7இல் நடைபாலத்துடன் கூடிய ரெகுலேட்டர் அமைப்பதற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**தளமட்டச் சுவர்கள் அமைத்தல்**

★ கும்பகோணம் வட்டம், சுந்தரப் பெருமாள் கோயில் கிராமத்தில் அரசலாற்றின் குறுக்கே மைல் 52/3–4இல் தளமட்ட சுவர் அமைக்கப்படும். (5.30 கோடி ரூபாய்)

★ திருவிடைமருதூர் வட்டம், பவுண்டரிகாபுரம் கிராமத்தில் மாங்குடி வாய்க்காலுக்கு நீர் வழங்கும் பொருட்டு கீர்த்திமன்னார் ஆற்றின் குறுக்கே மைல் 63/1–2இல் தளமட்ட சுவர் அமைக்கப்படும். (4 கோடி ரூபாய்)

**தடுப்பணைகள் அமைத்தல்**

★ ஒரத்தநாடு வட்டம், தாலயமங்களம் கிராமத்தில் தாலயமங்களம் ஏரி வடிகாலின் குறுக்கே எல்.எஸ்.1.60 கி.மீ–இல் தடுப்பணை அமைக்கப்படும். (50 இலட்சம் ரூபாய்)

★ ஒரத்தநாடு வட்டம், வண்ணான்கொல்லைபட்டி கிராமத்தில் பனங்குளம் உபரி நீர்போக்கின் குறுக்கே எல்.எஸ்.2.00 கி.மீ–இல் தடுப்பணை அமைக்கப்படும். (70 இலட்சம் ரூபாய்)

★ ஒரத்தநாடு வட்டம், தோப்பு விடுதி கிராமத்தில் வண்ணான்வாரியின் குறுக்கே எல்.எஸ்.0.100 கி.மீ–இல் தடுப்பணை அமைக்கப்படும். (60 இலட்சம் ரூபாய்)

★ ஒரத்தநாடு வட்டம், அருமலை கிராமத்தில் அருமலை வடிகாலின் குறுக்கே எல்.எஸ்.1.250 கி.மீ–இல் தடுப்பணை அமைக்கப்படும். (50 இலட்சம் ரூபாய்)

★ ஒரத்தநாடு வட்டம், வெள்ளூர் மற்றும் தொண்டாரம்பட்டு கிராமங்களில் பட்டுவானாச்சி வடிகாலின் குறுக்கே முறையே எல்.எஸ்.6.50 கி.மீ மற்றும் எல்.எஸ்.11.00 கி.மீ–இல் தடுப்பணை அமைக்கப்படும். (95 இலட்சம் ரூபாய்)

**மருத்துவ வசதிகள்**

★ JICA திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 3.28 கோடி ரூபாய் மதிப்பில் அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

★ மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, ஒரு கோடி ரூபாய் மதிப்பில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (HUB), அதனைச் சார்ந்த கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருவையாறு மருத்துவமனைகள் (Spoke) மாரடைப்பு சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படும்.

★ தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 16 கோடி ரூபாய் மதிப்பில் புற்று நோய்க்கான கதிரியக்க சிகிச்சை கருவி அமைக்கப்படும்.

★ தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 12 கோடி ரூபாய் மதிப்பில் சீமாங்க் மையம் ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தப்படும்.

★ அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனையில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டணமில்லா கருத்தரிப்பு மையம் அமைக்கப்படும்.

★ தஞ்சாவூர் மாவட்டத்தில் 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதியதாக மருந்து கிடங்கு அமைக்கப்படும்.

★ தஞ்சாவூர் மாவட்டத்தில் பணியாற்றும் 309 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு மருத்துவ புள்ளி விவரங்களை பதிவு செய்திட ரூ.30.90 இலட்சம் மதிப்பில் கையடக்க கணினிகள் (Tablets) வழங்கப்படும்.

★ சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் 31.35 இலட்சம் ரூபாய் மதிப்பில் விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.

★ பட்டுக்கோட்டை மற்றும் ஒரத்தநாடு அரசு மருத்துவமனைகளில் 4.20 கோடி ரூபாய் மதிப்பில் முதல்நிலை பரிந்துரை மையம் அமைக்கப்படும்.

★ பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் Diplomate of National Board (DNB) மருத்துவ பட்ட மேற்படிப்புடன் 1.49 கோடி ரூபாய் மதிப்பில் சீமாங் அறுவை அரங்கம் மற்றும் பச்சிளம் குழந்தைகள் பிரிவு ஏற்படுத்தப்படும்.

★ கும்பகோணம் அரசு மருத்துவமனையில் 1.25 கோடி ரூபாய் மதிப்பில் டயாலிசிஸ், எண்டோஸ்கோப் உள்ளிட்ட அதிநவீன உபகரணங்கள், பயன்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களுக்கான தொற்று கிருமி நீக்கு பிரிவு, புற்றுநோயாளிகளுக்கான வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

★ வல்லம் அரசு மருத்துவமனையில் 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

**புறவழிச்சாலை**

கும்பகோணம் நகருக்கான மூன்றாம் கட்ட புறவழிச்சாலை 9.42.கி.மீ நீளத்திற்கு அமைக்கப்படும். இதற்கான நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. (28.00 கோடி ரூபாய்)

**பாலங்கள்**

★ சின்னப்புலிக்காடு–ராகவாம்பாள்புரம் சாலையில் கி.மீ. 0/2இல் பாலம் கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)

★ சாலியமங்கலம் – சடையர்கோயில் சாலையில் கி.மீ. 7/4இல் சிறு பாலம் கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)

★ ஊரணிபுரம் – கரியவிடுதி சாலையில் கி.மீ. 0/8–ல் பாலம் கட்டப்படும். (1.60 கோடி ரூபாய்)

★ இடையாத்தி கிராமத்தில் வெள்ளாளர் தெரு மற்றும் ஆதி திராவிடர் தெருவிற்கிடையே G.A வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டப்படும். (1.75 கோடி ரூபாய்)

★ திருநீலக்குடி – கடலங்குடி சாலையில் கி.மீ. 0/6இல் பாலம் கட்டப்படும். (1.98 கோடி ரூபாய்)

★ அய்யம்பேட்டை – கணபதி அக்ரஹாரம் சாலை கி.மீ.1/10இல் குறுக்கிடும் காவேரி ஆற்றின் குறுக்கே கணபதி அக்ரஹாரத்தில் மதிப்பில் பாலம் கட்டப்படும். (10.80 கோடி ரூபாய்)

★ திருவிசைநல்லூர் – திருபுவனம் சாலையில் கி.மீ.0/2இல் பாலம் கட்டப்படும். (2.60 கோடி ரூபாய்)

★ புதுவிடுதி – வெட்டுவாக்கோட்டை – கறம்பக்குடி சாலையில் கி.மீ.3/6இல் பாலம் கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)

★ ரெட்டிப்பாளையம் கிராமத்தில் கொற்கை பஞ்சாயத்துக்கும் சேசம்பாடி பஞ்சாயத்துக்கும் இடையில் கி.மீ.0/4இல் பாலம் கட்டப்படும். (1.98 கோடி ரூபாய்)

★ நெய்வாசல் – அரசப்பட்டு – ஊசிமதகு சாலையில் கி.மீ.4/6இல் பாலம் கட்டப்படும். (1.97 கோடி ரூபாய்)

★ ஆலத்தூர் – புலவஞ்சி சாலையில் கி.மீ.1/2இல் பாலம் கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)

**திட்ட அறிக்கை**

★ திருவையாறு நகருக்கு புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

★ தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை – அறந்தாங்கி – சாயல்குடி மாநில நெடுஞ்சாலை எண்.29யினை அதாவது தஞ்சாவூர் மாவட்ட சாலை பகுதி பட்டுக்கோட்டை முதல் ஆவணம் கைகாட்டி வரை கிமீ 0/0–69/2 வரை 69.20 கி.மீ நீளம் தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தி நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துவதற்கு 3.2 கோடி ரூபாய் செலவில் தளஆய்வு மற்றும் சாத்தியக்கூறு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

★ அய்யம்பேட்டை – கணபதிஅக்ரஹாரம் சாலையில் கிமீ. 0/4 குறுக்கிடும் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே அய்யம்பேட்டையில் உயர்மட்ட பாலம் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

★ திருக்காட்டுப்பள்ளி – செங்கிபட்டி – பட்டுக்கோட்டை சாலை (SH –99) கி.மீ. 5/10–6/2இல் வெண்ணாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

❖ ❖ ❖

# ரூ.162 கோடி மதிப்பீட்டில் 1,792 அடுக்குமாடிக் குடியிருப்புகள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 03.12.2017 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

## வருவாய் வட்டம் அமைத்தல்

பொள்ளாச்சி வருவாய் வட்டத்தைப் பிரித்து ஆனைமலையை தலைமை இடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் அமைக்கப்படும்.

## அடுக்குமாடிக் குடியிருப்புகள்

பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி, குப்பிச்சிபாளையம் பகுதியில் வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமாக உள்ள 18.74 ஏக்கர் இடத்தை குடிசை மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்து, சுமார் 162 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,792 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

## குடிநீர் திட்டங்கள்

★ கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, கூடுதல் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் (பில்லூர்–III) 750 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அம்ருத் மற்றும் ஆசியன் வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

★ கவுண்டம்பாளையம் வடவள்ளி கூட்டுக்குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மூலம் கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் ஆகிய பகுதிகளுக்கு 23 MLD குடிநீர் வழங்க தற்போது செயல்பட்டு வரும் குடிநீர் திட்டத்தில் புதிய அதிகத் திறன் மின் இணைப்பான் மாற்றுதல், செயல்பாட்டில் உள்ள கான்கிரீட் குழாய்களுக்கு பதிலாக இரும்பு குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் அபிவிருத்தி செய்தல் முதலான பணிகள் 32.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பில்லூர்–III திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படும்.

★ சிறுவாணி அணையின் கொள்ளளவினை உயர்த்தும் வகையில், கேரள அரசின் அனுமதி பெற்று, கோயம்புத்தூர் மாநகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வாரியம் மற்றும் கோவை ஈசா அறக்கட்டளையுடன் இணைந்து, தனியார் நிறுவன சமூக பொறுப்பு நிதி மூலம் நிதியாதாரம் பெற்று தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ 241 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1.92 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் மற்றும் மூப்பேரிபாளையம் பேரூராட்சிகள், திருப்பூர் மாவட்டம், அவிநாசி பேரூராட்சி, சூலூர் விமானப்படை தளம் மற்றும் திருப்பூர் மற்றும் பல்லடம் ஒன்றியங்களிலுள்ள 155 கிராம குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டு குடிநீர்த் திட்டம் நபார்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

★ கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 212 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 63,543 மக்கள் பயன்பெறும் வகையில் ஆழியாறு நீர் ஆதாரத்துடன் கூட்டு குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**காய்கறி சந்தை**

மேட்டுப்பாளையம் சாலையில் தற்போது இயங்கி வரும் காய்கறி சந்தையானது, அதே மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள 35 ஏக்கர் உரக்கிடங்கு வளாக நிலத்தில், 12 ஏக்கர் பரப்பளவில் கூடுதல் எண்ணிக்கையிலான கடைகள் மற்றும் கூடுதல் வாகனம் நிறுத்துமிட வசதிகளுடன் கோயம்புத்தூர் மாநகராட்சியால் பொலிவுறு நகரங்கள் (Smart City) திட்டத்தின்கீழ் புதியதாக அமைக்கப்படும்.

**சுரங்க நடைபாதை அமைத்தல்**

★ கோயம்புத்தூர் மாநகராட்சி அவிலா பள்ளி அருகே அதிக போக்குவரத்து உள்ள தடாகம் சாலை மற்றும் என்.எஸ்.ஆர். சாலை சந்திப்பை பொதுமக்கள் எளிதாக கடக்க சுரங்க நடைபாதை அல்லது உயர்மட்ட நடைபாதை அமைக்க சாத்தியக் கூறு அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

★ கோயம்புத்தூர் மாநகராட்சி, வ.உ.சிதம்பரம் பூங்கா வளாகத்தில் செயல்பட்டு வரும் மிருகக்காட்சி சாலை 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தி பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் சிறந்த பொழுதுபோக்கு அம்சங்களுடன் புனரமைக்கப்படும்.

★ கோயம்புத்தூர் காந்திபுரம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முதல் அடுக்கு மேம்பாலத்திற்கு பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர் சூட்டப்படும்.

★ கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட வடவள்ளி, வீரகேரளம், வெள்ளைகிணர், சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் ஆகிய பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் செயல்படுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்படும்.

**முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள்**

★ சிக்கதாசன்பாளையம், சூலூர், வடக்கிபாளையம், பூலுவப்பட்டி, பிச்சனூர், ஆனைமலை மற்றும் பொள்ளாச்சி ஆகிய ஏழு இடங்களில் முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள், சிப்பம் கட்டும் கூடம், ஏல மையம், குளிர்பதனக் கிடங்கு, பழுக்க வைக்கும் கூடம், விவசாயிகள் பயிற்சி மையம், கடைகள், தரக்கட்டுப்பாடு வசதிகள், அலுவலகம் மற்றும் எடைமேடை போன்ற வசதிகளுடன் 27.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

★ கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகளின் நலனுக்காக, அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் 60 மெட்ரிக் டன் கணினி எடை மேடை ஏலக்கூடத்தை மின்னணுமயமாக்கல், பருத்தி தரம் பிரிக்கும் இயந்திரம், கணினி மற்றும் ஜெனரேட்டர் போன்ற வசதிகள் ஏற்படுத்தி, மத்திய அரசு வேளாண் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு நிதி மற்றும் நபார்டு வங்கி நிதியுதவியுடன் 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேசிய வேளாண் சந்தையுடன் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**புதிய கால்நடை கிளை நிலையம்**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தேவம்பாடி, ஆவாலப்பம்பட்டி, காரமடை ஊராட்சி ஒன்றியத்திற்குற்பட்ட இலுப்பநத்தம், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோலார்பட்டி ஆகிய 4 கிராமங்களில் புதிய கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கப்படும்.

**தடுப்பணைகள் கட்டுதல்**

★ கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், மண்ணூர் கிராமம், கொரையூர் ஆற்றின் குறுக்கே 1.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும்.

★ மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி கிராமம் பெரியபள்ளத்தின் குறுக்கே 1.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும்.

★ மேட்டுப்பாளையம் வட்டம், கெம்மராம்பாளையம் கிராமம் பெரிய பள்ளத்தின் குறுக்கே 1.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும்.

★ மதுக்கரை வட்டம், திருமலையம்பாளையம் கிராமம் 364, குமிட்டிபதி ஆற்றின் குறுக்கே 62.70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும்.

**மருத்துவ வசதிகள்**

★ கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியம், வடசித்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

★ JICA திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 286.68 கோடி ரூபாய் மதிப்பில் அதிநவீன உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

★ மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, ஒரு கோடி ரூபாய் மதிப்பில் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அதனைச் சார்ந்த மேட்டுப்பாளையம், பல்லடம், பொள்ளாச்சி, வால்பாறை மருத்துவமனைகளில் மாரடைப்பு சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படும்.

★ கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 8.41 கோடி ரூபாய் மதிப்பில் தாய்சேய் நலப்பிரிவிற்கு நவீன கருவிகள், தீக்காய சிகிச்சை மையம், புற்று நோயாளிகளுக்கான வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிச்சை மையம், கட்டணமில்லா கருத்தரிப்பு மையம், டிஜிட்டல் சப்ஸ்டிராக்சன் ஆன்ஜியோகிராபி வசதி ஏற்படுத்தப்படும்.

★ கோயம்புத்தூர் மாவட்டத்தில் 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதியதாக மருந்து கிடங்கு அமைக்கப்படும்.

★ கோயம்புத்தூர் மாவட்டத்தில் பணியாற்றும் 328 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு மருத்துவ புள்ளி விவரங்களை பதிவு செய்திட 32.80 இலட்சம் ரூபாய் மதிப்பில் கையடக்க கணினிகள் (Tablets) வழங்கப்படும்.

★ ஆனைமலை வட்டாரத்தில் 101 இலட்சம் ரூபாய் மதிப்பில் விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.

★ பொள்ளாச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 7.65 கோடி ரூபாய் மதிப்பில் டயாலிசிஸ், எண்டோஸ்கோப் உள்ளிட்ட அதிநவீன உபகரணங்கள், சீமாங் அறுவை அரங்கம், சீமாங் பிரிவு மேம்படுத்துதல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

★ காரமடை சமுதாய வட்டார மருத்துவமனையில் 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

★ மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் 8.22 இலட்சம் ரூபாய் மதிப்பில் டயாலிசிஸ் கருவி நிறுவப்படும்.

★ வால்பாறை அரசு மருத்துவமனையில் 8.22 இலட்சம் ரூபாய் மதிப்பில் டயாலிசிஸ் கருவி நிறுவப்படும்.

**மின் வசதிகள்**

★ கோவை மாவட்டம், சரவணம்பட்டி அலையன்ஸ் வணிக வளாகத்தில் 33/11 கி.வோ. புதிய துணைமின் நிலையம் 10.78 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

★ கோவை மாவட்டம் தேவனம்பாளையம் 110/22 கி.வோ. புதிய துணைமின் நிலையம் 11.37 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

★ கோவை மாவட்டம் பாப்பநாயக்கன்பாளையம் 110/11 கி.வோ. புதிய துணைமின் நிலையம் 9.64 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

★ கோவை மாவட்டம் பட்டணம் 110/11 கி.வோ. புதிய துணைமின் நிலையம் 22.34 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

★ கோவை மாவட்டம் சமத்தூர் 110/22 கி.வோ. புதிய துணைமின் நிலையம் 8.5 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

★ கோவை மண்டலத்தில் நான்கு புதிய கணினி முறையில் மின் தடை பழுதுநீக்கும் மையங்கள் 56 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறுவப்படும்.

**உயர்மட்டப் பாலங்கள்**

★ கோவையில் உக்கடம் – ஆத்துப்பாலம் மேம்பாலப் பணி 121.82 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

★ துடியலூர் – சின்னத்தடாகம் சாலையில் கி.மீ. 9/4–இல் பழுதடைந்த தரை பாலத்திற்கு பதிலாக உயர்மட்டப் பாலம் 2.75 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

★ ஊட்டி – கோத்தகிரி – மேட்டுப்பாளையம் – சத்தி – கோபி – ஈரோடு – S.புங்கம்பாளையம் சாலை கி.மீ. 0/4 முதல் 69/6 வரை 1.25 கோடி ரூபாய் மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

★ போத்தனூர் – வெள்ளலூர் சாலையில் கி.மீ. 0/8–இல் பிரிந்து இடையர்பாளையம் செல்லும் சாலையில் கி.மீ. 4/8இல் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

★ பொள்ளாச்சி – வால்பாறை சாலையில் கி.மீ. 10/0இல் பிரிந்து ஆனைமலை – பூலாங்கிணர் சாலையில் கி.மீ.11/4இல் சேரும் சாலையில் கி.மீ.2/2இல் ரூ.1.00 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

★ செடிமுத்தூர் – கோபாலபுரம் சாலையில் கி.மீ.0/4இல் பிரிந்து கேரள எல்லை – தப்பட்டை கிழவன்புதூர் செல்லும் சாலையில் கி.மீ.1/0இல் 2.50 கோடி ரூபாய் மதிப்பில் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

★ கோயம்புத்தூர் – தொண்டாமுத்தூர் – நரசிபுரம் சாலையில் கி.மீ.7/10இல் 2.10 கோடி ரூபாய் மதிப்பில் உயர் மட்டப்பாலம் கட்டப்படும்.

★ சிந்தாமணிபுதூரிலிருந்து – நடுப்பாளையம் வழியாக பாப்பம்பட்டி செல்லும் சாலையில் கி.மீ.0/10இல் 3.50 கோடி ரூபாய் மதிப்பில் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

★ கணபதி – அத்திப்பாளையம் சாலையில் கி.மீ.8/10இல் 2 கோடி ரூபாய் மதிப்பில் உயர் மட்டப்பாலம் கட்டப்படும்.

**பாலங்கள்**

★ காமநாயக்கன்பாளையம்– நெகமம்–செட்டிபாளையம் சாலையில் கி.மீ. 15/8இல் 1.50 கோடி ரூபாய் மதிப்பில் பாலம் கட்டப்படும்.

★ பேரூர் – வேடபட்டி சாலையில் கி.மீ. 0/6இல் 3.50 கோடி ரூபாய் மதிப்பில் நொய்யல் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்படும்.

★ மேட்டுப்பாளையம் – கிச்சகத்தூர் சாலையில் கி.மீ. 2/4இல் 1.10 கோடி ரூபாய் மதிப்பில் பாலம் கட்டப்படும்.

**இரயில்வே மேம்பாலங்கள்**

★ சிங்காநல்லூர் – பீளமேடு இரயில் நிலையங்களுக்கிடையே தண்ணீர் பந்தல் சாலையில் கி.மீ. 0/6இல் கடவு எண் 6க்கு பதிலாக இரயில்வே மேம்பாலம் 12.65 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

★ கோயம்புத்தூர் இரயில் நிலையத்திற்கு அருகில் நகரும் படிகளுடன் நடைமேம்பாலம் 8.09 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

★ இரயில்வே கி.மீ. 13/25–27இல் பீளமேடு – கோயமுத்தூர் வடக்கு இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண்.13க்கு மாற்றாக காந்திஜி சாலை (துயிரிட்டரி – கண்ணப்பன் நகர்) கி.மீ. 0/2இல் 14 கோடி ரூபாய் மதிப்பில் இரயில்வே கீழ்பாலம் அமைக்கப்படும்.

- ★ இராமசந்திர நாயுடு தெருவில் (மாநகராட்சி சாலை) கி.மீ. 0/4இல் உள்ள இரயில்வே கி.மீ. 2/9–11இல் உள்ள கடவு எண் 3க்கு மாற்றாக கோயம்புத்தூர் மற்றும் இருகூர் இரயில்வே நிலையங்களுக்கு இடையே இரயில்வே மேம்பாலம் 26.70 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

- ★ நீலிகோணாம்பாளையம் SIHS காலனி சாலை கி.மீ. 1/6இல் கடவு எண் 5–க்கு மாற்றாக இருகூர் – பீளமேடு இரயில்வே நிலையங்களுக்கிடையே இரயில்வே கிமீ 3/21–23–ல் 58.52 கோடி ரூபாய் மதிப்பில் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

**இரயில்வே மேம்பாலங்களுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி**

- ★ துடியலூர் சரவணம்பட்டி சாலை கிமீ. 0/10இல் இரயில்வே கி.மீ. 6/12–13இல் உள்ள இருப்புப் பாதை கடவு எண் 4க்கு பதிலாக கோவை வடக்கு மற்றும் துடியலூர் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்,

- ★ துடியலூர் கோவில்பாளையம் சாலை கி.மீ. 1/6இல் ரயில்வே கி.மீ.8/000–100இல் உள்ள இருப்புப்பாதை கடவு எண்.5க்கு பதிலாக கோவை வடக்கு காரமடை இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம் மற்றும் குறைந்த பயன்பாட்டு சுரங்கப்பாதை,

- ★ பொள்ளாச்சி பாலக்காடு கி.மீ. 1/8இல் சாலையில் இரயில்வே கி.மீ. 123/1–2இல் உள்ள இருப்புப் பாதை கடவு எண் 122க்கு பதிலாக பொள்ளாச்சி கிணத்துக்கடவு இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்,

- ★ காமநாயக்கன்பாளையம் அன்னூர் சாலை கி.மீ. 20/6இல் பிரிந்து வடுகன் காளிபாளையம் செல்லும் சாலையில் கி.மீ. 8/4இல் ரயில்வே கிமீ.453/11–13 உள்ள இருப்புப்பாதை கடவு எண் 135க்கு பதிலாக இரயில்வே கி.மீ. 453/7–9இல் வஞ்சிபாளையம் சோமனூர் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்,

- ★ சேடர்பாளையம் வாய்க்கால்பாளையம் டவுன் பஞ்சாயத்து சாலை கி.மீ. 2/6இல் பிரிந்து வடுகன்காளிபாளையம் செல்லும் சாலையில் கடவு எண் 137க்கு பதிலாக இரயில்வே கி.மீ. 457/9–11இல் வஞ்சிபாளையம் சோமனூர் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்,

- ★ கரவளி மாதப்பூர் (வழி) கணியூர் செல்லும் சாலையில் கி.மீ.3/2இல் உள்ள இருப்புப் பாதை கடவு எண் 141க்கு பதிலாக இரயில்வே கி.மீ. 463/23–25இல் சோமனூர் சூலூர் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்,

★ இரத்தினபுரி தில்லை நகர் பீளமேடு மற்றும் வடகோவை இரயில் நிலையங்களுக்கு இடையே இரத்தினபுரியில் சாலை கீழ்பாலம்,

★ கி.மீ. 0/2ல் ராசிபாளையம் தென்னம்பாளையம் சாலையில் இரயில்வே கி.மீ.466/21–23ல் இரயில்வே கடவு எண் 142A க்கு பதிலாக இரயில்வே மேம்பாலம்,

★ காரமடை–மேட்டுப்பாளையம் இரயில் நிலையங்களுக்கு இடையே காரமடை – தோலாம்பாளையம் சாலையில் இரயில்வே கி.மீ. 26/1 –2இல் உள்ள கடவு எண்.11க்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம்

ஆகிய பணிகளுக்கு திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி**

★ மேலும் , அன்னூர் நகருக்கு புறவழிச்சாலை அமைக்கவும்,

★ காரமடை நகருக்கு 13.20 கி.மீ. நீள கிழக்குப் புறவழிச்சாலை அமைக்கவும்,

★ பொள்ளாச்சி நகருக்கு 9.50 கி.மீ. நீள மேற்கு புறவழிச்சாலை அமைக்கவும்,

★ பொள்ளாச்சி–கோவை சாலைக்கு செட்டிபாளையம் வழியாக 23.70 கி.மீ. நீள மாற்றுப்பாதை அமைக்கவும்,

★ கோவை மாநகரில் உப்பிலிபாளையம் முதல் சின்னியம்பாளையம் காளப்பட்டி விமான நிலையம் வரை (சேலம் – கொச்சின் சாலை S.H.U. 52) உயர்மட்டச் சாலை அமைக்கவும்,

★ கோவை விமான நிலையத்திலிருந்து மேட்டுப்பாளையம் நகரை சித்ரா–குரும்பபாளையம் வழியாக இணைக்கும் 8.60 கி.மீ. நீள சாலையை மேம்படுத்தவும்,

விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஆனைமலையாறு, நல்லாறு தொலைநோக்குத் திட்டம் செயல்படுத்த வல்லுநர் குழு அமைத்தல்**

ஆழியாறு திட்டத்தினை இறுதியாக செயல்படுத்த ஆனைமலையாறு திட்டம் கடந்த 27 ஆண்டுகளாக செயல்படுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பல இடர்பாடுகளால் நிறைவேற்றப்படவில்லை. தற்போது இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டங்களை செயல்படுத்த, அனுபவம் வாய்ந்த, மூத்த அதிகாரிகள், மூத்த பொறியாளர்கள் அடங்கிய வல்லுநர்கள் குழு விரைவில் அமைக்கப்படும்

இத்திட்டத்தில் நன்மை பெறும் 4 மாவட்டங்கள்—கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் உள்ள இலட்சோப இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க, நீர்த்தேக்கம் கட்டுவதன் மூலமாக, வெள்ளக் காலங்களில் கடலில் கலக்கின்ற உபரிநீரைத் தேக்கவும், அடிப்படை ஆதாரமான நீர் தங்குதடையின்றி கிடைக்கவும் இந்தத் திட்டம் பயன்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதோடு, சொட்டுநீர் பாசன வசதி ஏற்படுத்த வேண்டும், அதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் அரசு ஆய்வு செய்யும்.

அதேபோல, அத்திக்கடவு—அவினாசித் திட்டத்தில் ஒருசில பகுதிகள் விடுபட்டுப் போயுள்ளன. அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோரிக்கை மாவட்ட அமைச்சர் அவர்களும், சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களும், மாநிலங்களவை உறுப்பினர் திரு.செல்வராஜ் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்று, காரமடை ஒன்றியம், பெரியநாயக்கன்பாளையம் ஆகிய ஒன்றித்திலுள்ள விடுபட்டப் பகுதிகளை சேர்த்து புதிதாக ஒரு திட்டம் வகுக்கவிருக்கின்றது. அதற்காக ஆய்வு மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய விமான நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று எல்லோராலும் வைக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றும்விதமாக, விரைவில் அதற்குத் தேவையான நிலத்தைப் பெற்றுத்தந்து, விமான நிலையத்தை விரிவிபடுத்த தேவையான நடவடிக்கையை அம்மாவினுடைய அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழகத்திலேயே தொழில்கள் நிறைந்த பகுதி கோவை மாவட்டம். இங்கு இன்னும் பல தொழில்கள் வருவதற்கும், IT Park வருவதற்கும் தேவையான நடவடிக்கையை அம்மாவினுடைய அரசு எடுக்கும், அதற்கு துணை நிற்கும் என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

❖ ❖ ❖

நீலகிரி

# ரூ.58.81 கோடி மதிப்பீட்டில் 1,480 பயனாளிகளுக்கு புதிய குடியிருப்புகள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
30.12.2017 அன்று நீலகிரியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த
சிறப்பு அறிவிப்புகள்

★ இம்மாவட்டத்தில் வசித்து வரும் பழங்குடியினரான தோடர், கோத்தர், இருளர், காட்டுநாயக்கர், குறும்பர் மற்றும் பனியர் ஆகியோரின் 500 குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அவை 5 கோடி ரூபாய் செலவில் பழங்குடியினர் நலத்துறை மூலம் பழுதுபார்க்கப்படும்.

★ குன்னூர் நகராட்சி பேருந்து நிலையம் 44 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

★ கூடலூர் பேருந்து நிலையம் அதிக பேருந்துகளை நிறுத்தும் வகையில் 4.75 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யப்படும்.

★ இந்த மாவட்டத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.

★ உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட சாலைகள் 2.73 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

★ சுற்றுலா தலமான உதகையில் வாகனங்கள் நிறுத்தும் வசதியை மேம்படுத்த, ரோஜா பூங்காவில் பல்வகை அடுக்கு வாகன நிறுத்துமிடம் தனியார் பங்களிப்புடன் 3 கோடி ரூபாய் செலவில் புதியதாக கட்டப்படும்.

★ உதகமண்டல வட்டாட்சியர் அலுவலகம் புதியதாக கட்டப்படும்.

★ உதகை நகராட்சியில் உள்ள கோடப்மந்து கால்வாயில் உள்ள பழுதுகள் நீக்கப்படும்.

★ இம்மாவட்டத்தில் உள்ள பழங்குடியின மாணவர்களின் உயர் கல்வி கற்றல் விகிதத்தை அதிகரிக்க ஏதுவாக கோத்தகிரியில் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையம் ஒன்று 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**மருத்துவ வசதிகள்**

★ உயர்தர மருத்துவ வசதிகளுடன் கூடிய நான்கு ‘108 அவசர ஊர்திகள்’ வழங்கப்படும்.

★ நீலகிரி மாவட்டத்தில் 1.09 கோடி ரூபாய் மதிப்பில் காசநோய் ஒழிப்பு சிறப்பு திட்டம் தொடங்கப்படும்.

★ நீலகிரி மாவட்டத்தில் 67.5 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய மருந்து கிடங்கு வசதி ஏற்படுத்தப்படும்.

★ நீலகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 1.50 கோடி ரூபாய் மதிப்பில் எக்கோகார்டியாகிராம் கருவி, மூப்பியல் பிரிவு, நுரையீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை வசதி ஏற்படுத்தப்படும்.

★ நீலகிரி மாவட்டத்தில் பணியாற்றும் 194 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு மருத்துவ புள்ளி விவரங்களை பதிவு செய்திட 19.40 இலட்சம் மதிப்பில் கையடக்க கணினி (Tablets) வழங்கப்படும்.

★ உதகமண்டலம் அரசு மருத்துவமனையில் 64.70 இலட்சம் ரூபாய் மதிப்பில் டயாலிசிஸ், எண்டோஸ்கோப், நவீன ஆய்வக உபகரணங்கள் மற்றும் தடுப்பூசி மருந்து சேமிப்பு கிடங்கு அமைக்கப்படும்.

★ குன்னூர் அரசு மருத்துவமனையில் 64.50 இலட்சம் மதிப்பில் விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.

★ நெலாக்கோட்டை அரசு மருத்துவமனையில் 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

**மின் வசதிகள்**

★ நீலகிரி மாவட்டம், கோத்தகிரி கெரடாமட்டம், குன்னூர் சிம்ஸ்பார்க் மற்றும் கோத்தகிரி அரவேனுவில் புதிய 33/11 கே.வி. துணை மின் நிலையங்கள் ரூ.24.55 கோடி செலவில் அமைக்கப்படும்.

★ நீலகிரி மாவட்டம், கடநாடு பஞ்சாயத்தில் புதிய 110/11 கி.வோ. மலர்பெட்டு துணை மின் நிலையம் 4.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

★ நீலகிரி மாவட்டத்தில் 110/11 கி.வோ. கட்டபெட்டு துணை மின் நிலையத்தில் 1.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றி 2 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றிகளாக தரம் உயர்த்தப்படும்.

★ நீலகிரி மாவட்டத்தில் 110/11 கி.வோ. ஜெகதளா துணை மின் நிலையத்தில் 1.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றிகள் தரம் உயர்த்தப்படும்.

★ நீலகிரி மாவட்டத்தில் 110/11 கி.வோ. உதகை துணை மின் நிலையத்தில் 2.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றிகள் 2 x 16 எம்.வி.ஏ. மின் மாற்றிகளாக தரம் உயர்த்தப்படும்.

★ நீலகிரி மின் பகிர்மான வட்டத்தில் புதியதாக கணினி முறையில் மின்தடை பழுது நீக்கும் மையம் (Fuse off call centre) 19.50 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறுவப்படும்.

**சாலை மேம்பாட்டு வசதிகள்**

★ கொதுமுடி எப்பநாடு சாலையில் 4.40 கி.மீ நீளச் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் 4.75 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

★ ஹெலன் எல்லமலை பெரிய சோலை சாலையில் 6.30 கி.மீ நீள சாலையை மேம்பாடு செய்யும் பணி மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் 5.35 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

அதேபோல, மேடையில் வீற்றிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர் பெருமக்கள், பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.

நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகளுக்கு பசுந்தேயிலை மானியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதை இந்த அரசு கவனத்தோடு பரிசீலித்து அதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கும் சிறு தேயிலை விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று அவர்களது நலன் காக்கும் பொருட்டு 2017–2018ஆம் ஆண்டில் பசுந்தேயிலை கிலோ ஒன்றிற்கு ரூ.2/– வீதம் மானியம் அளிக்க உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக கூடுதலாக 12 கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்பதையும் இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக 58 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உதகமண்டலம் நகராட்சி, குன்னூர் நகராட்சி, நெல்லியாளம் நகராட்சியிலும் மற்றும் அவலாஞ்சியிலும் 1,480 பயனாளிகளுக்கு புதிய குடியிருப்புகள் கட்டித்தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

## ரூ.12.5 கோடி மதிப்பீட்டில் நிலக்கோட்டை வட்டத்தில் புதிய தடுப்பணை !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 31.12.2017 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள்

**புதிய வருவாய் வட்டம் உருவாக்குதல்**

★ திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வருவாய் வட்டத்தைப் பிரித்து குஜிலியம்பாறையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படும்.

**குடிநீர்**

★ திண்டுக்கல் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை திண்டுக்கல் மாநகராட்சி உட்பட 7 பேரூராட்சிகள் மற்றும் 816 ஊரக குடியிருப்புகளுக்கு விரிவாக்கம் செய்யும் பொருட்டு விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**வடிகால்கள் அமைத்தல்**

★ வேடசந்தூர் பேரூராட்சியில் 1.5 கோடி ரூபாய் மதிப்பில் வடிகால்கள் அமைக்கப்படும். 2018–2019ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் ஒதுக்கீடு பெறப்பட்டு, இப்பணி மேற்கொள்ளப்படும். இதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

**புதிய கால்நடை கிளை நிலையங்கள்**

★ குஜிலியம்பாறை ஒன்றியம், ஆர்.பில்லமநாயக்கன் பட்டியிலும், வடமதுரை ஒன்றியம், புத்தூரிலும் புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்படும்.

**சித்த மருத்துவக் கல்லூரி**

★ சித்த மருத்துவ படிப்பிற்கு உள்ள கூடுதல் தேவையை கருத்திற்கொண்டு 60 மாணவர்கள் படிக்கும் வகையில் பழநியில் ஒரு புதிய சித்த மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்.

**ஆரம்ப சுகாதார நிலையம்**

★ வேடசந்தூர் ஒன்றியம், ரெங்கநாதபுரத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

**மருத்துவ வசதிகள்**

★ JICA திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு 11.68 கோடி ரூபாய் மதிப்பில் அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

★ திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 28.5 கோடி ரூபாய் மதிப்பில் Diplomate of National Board (DNB) மருத்துவ பட்ட மேற்படிப்பு துவங்குவதுடன், தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

★ திண்டுக்கல் மாவட்டம் கஸ்தூரிபாய் மருத்துவமனையில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் புதிய கிராம சுகாதார செவிலியர் பயிற்சி பள்ளி அமைக்கப்படும்.

★ 82.5 இலட்சம் ரூபாய் மதிப்பில் வளரிளம் பருவத்தினர் பாதுகாப்புத் திட்டம், மருந்து கிடங்கு விரிவாக்கம் செய்யப்படும்.

★ நிலக்கோட்டை மற்றும் வடமதுரை வட்டாரங்களில் விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.

★ அம்மையநாயக்கனூர் சமுதாய சுகாதார நிலையத்தில் நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

★ கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன் அமைக்கப்படும்.

★ பழனி அரசு மருத்துவமனையில் நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

★ ஆத்தூர் அரசு மருத்துவமனையில் 8.22 இலட்சம் ரூபாய் மதிப்பில் டயாலிசிஸ் கருவி வழங்கப்படும்.

**தடுப்பணைகள் கட்டுதல்**

★ நத்தம் கிராமத்தில் திருமணி முத்தாற்றின் குறுக்கே அமைந்துள்ள காட்டு பெரிய குளம் அணைக்கட்டினை 3 கோடி ரூபாய் மதிப்பில் திரும்பக் கட்டப்படும்.

★ நத்தம் வட்டம், கோசுகுறிச்சி கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலூத்துகுளம் அணைக்கட்டினை 2.72 கோடி ரூபாய் மதிப்பில் திரும்பக் கட்டப்படும்.

- ★ ஒட்டன்சத்திரம் வட்டம், விருப்பாச்சி கிராமத்தில் நங்காஞ்சியார் ஆற்றின் குறுக்கே 1.33 கோடி ரூபாய் மதிப்பில் தடுப்பணை கட்டப்படும்.
- ★ நிலக்கோட்டை வட்டம், சித்தர்கள் நத்தம் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே எல்.எஸ்.35.05 கி.மீ–இல் 12.5 கோடி ரூபாய் மதிப்பில் தடுப்பணை கட்டப்படும்.
- ★ நிலக்கோட்டை வட்டம், குன்னவராயன்கோட்டை கிராமத்தில் உச்சப்பட்டியின் அருகே மஞ்சளாறு ஆற்றின் குறுக்கே 2.5 கோடி ரூபாய் மதிப்பில் தடுப்பணை கட்டப்படும்.
- ★ நிலக்கோட்டை வட்டம், கனவாய்பட்டி கிராமத்தில் நெடுகை மஞ்சளாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும்.
- ★ நத்தம் வட்டம், முளையூர் கிராமத்திற்கு அருகே திருமணிமுத்தாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும்.
- ★ நத்தம் வட்டம், புன்னப்பட்டி கிராமத்திற்கு அருகே காட்டுப் பெரியகுளம் அணைக்கட்டிற்கு கீழ்புறத்தில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும்.
- ★ நிலக்கோட்டை வட்டம், கொன்னம்பட்டி கிராமத்தில், இராவூத்தர் தோட்டத்திற்கு அருகே மருதாநதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும்.
- ★ ஒட்டன்சத்திரம் வட்டம், ஜவ்வாதுப்பட்டி கிராமத்தில், நங்காஞ்சியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும்.
- ★ ஆத்தூர் வட்டம், வேலகவுண்டன்பட்டி அருகே சீவல்சரகு கிராமத்தில் குடகனாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும்.
- ★ வேடசந்தூர் வட்டம், மாரம்பாடி கிராமத்தில் வேலம்பாடி குடியிருப்பு அருகே சந்தானவர்தினி ஆற்றின் குறுக்கே 4.5 கோடி ரூபாய் மதிப்பில் தடுப்பணை கட்டப்படும்.

**பாலங்கள்**

- ★ மோர்பட்டி–சித்துவார்பட்டி சாலையில் சிறுபாலம் கட்டப்படும்.
- ★ வடமதுரை–வேலாயுதம் பாளையம் செங்குறிச்சி சாலையில் பாலம் கட்டப்படும்.
- ★ பழனி–கொழுமம் சாலையில் பிரிந்து சின்னகாந்திபுரம் வழியாக செல்லும் சண்முகம்பாறை சாலையில் பாலம் கட்டப்படும்.

- ★ அம்பிளிக்கை–குத்திலுப்பை சாலையில் பாலம் கட்டப்படும்.
- ★ சக்கையநாயக்கனுார் – ஜங்கில்பட்டி வழியிலுள்ள, அழகம்பட்டி சாலையில் பாலம் கட்டப்படும்.
- ★ கள்ளிமந்தையம்–ஒடைப்பட்டி சாலையில் 3 கோடி ரூபாய் மதிப்பில் பாலம் கட்டப்படும்.
- ★ அய்யலுார்–ஆலம்பட்டி சாலை கிமீ 7/2–இல் 2.5 கோடி ரூபாய் மதிப்பில் பாலம் கட்டப்படும்.

**சுரங்கப்பாதை**

- ★ திண்டுக்கல்–குஜிலியம்பாறை–கரூர் சாலையில் உள்ள இரயில்வே கடவு எண்.6க்கு மாற்றாக வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை 16.18 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

**திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி**

- ★ திண்டுக்கல் நகருக்கு புறவழிச்சாலை 19.25 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்படும். இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.
- ★ பழனி தாராபுரம் சாலையில் உடுமலைப்பேட்டை இரயில் நிலையங்களுக்கிடையே உள்ள கடவு எண்.63க்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டப்படும். இப்பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

**மின் வசதிகள்**

- ★ திண்டுக்கல் மின்பகிர்மான வட்டத்தில் புதிய நத்தம் உதவி மின் பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் மின் கட்டண வசூல் மையம்,
- ★ திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம் சின்னலூப்பை, சின்னாளப்பட்டி, மற்றும் லட்சுமணப்பட்டியில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும்.
- ★ வாகரை, கோவிலூர், எரியோடு, அய்யலூர், இராமராஜபுரம், மற்றும் அய்யம்பாளையம் ஆகிய துணை மின் நிலையங்களில் திறன் உயர்த்தப்பட்ட மின் மாற்றிகள் அமைக்கப்படும்,
- ★ சித்தர்கள் நத்தம் துணை மின் நிலையம் 2.49 கோடி ரூபாய் செலவில் திறன் உயர்த்தப்படும்.

★ திண்டுக்கல் மின் பகிர்மான வட்டத்தில் புதிதாக கணினி முறையில் மின் தடை பழுது நீக்கும் மையம் (Fuse off call centre) நிறுவப்படும்.

நீண்ட நாட்களாக பொதுமக்கள் முக்கியமான கோரிக்கையை அரசுக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக 30 மாவட்டங்களில் நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். இந்த சூழ்நிலையில் தமிழக சிறையில் ஆயுள் தண்டனை பெற்று பத்து ஆண்டுகள் வரை சிறைவாசம் அனுபவித்து வந்த சிறைக் கைதிகளை சட்டத்திற்கு உட்பட்டு மற்றும் சிறை விதிகளுக்கு உட்பட்டு மனிதாபிமான அடிப்படையில் அவர்களை முன்விடுதலை செய்ய மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் அம்மாவின் அரசு முன்விடுதலை செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖



"புரட்சித் தலைவர் **எம்.ஜி.ஆர்.** அவர்களின் கனவை புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் நனவாக்கினார்கள். புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் விட்டுச் சென்ற பணியை நாங்கள் தொடர்ந்து செய்து வருகிறோம்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி** K.**பழனிசாமி** அவர்கள்